KALUBOWITIYANA TEA

# ஆண்டறிக்கை
# 2016/17

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| கூட்டாண்மைத் தகவல்கள், அறிமுகம், நோக்கு, அரும்பணி மற்றும் கட்டமைப்பு | *1 - 4* |
| தலைவரின் மீளாய்வு மற்றும நிதிசார் மீளாய்வு | *5 - 8* |
| பணிப்பாளர்களின் அறிக்கை | *9 - 10* |
| கணக்காய்வாளர்களின் அறிக்கை | *11 - 25* |
| விரிவான வருமானக் கூற்று | *26* |
| நிதிநிலைமை பற்றிய கூற்று | *27* |
| உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று | *28* |
| காசுப் பாய்வுக் கூற்று | *29* |
| நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் - கணக்கீட்டுக் கொள்கைகள் | *30 - 38* |
| கணக்குகளுக்கான குறிப்புகள் | *39 - 51* |
| * முந்திய பத்து வருடங்களுக்கான விசேட நிதிசார் நிகழ்வுகள் | *52* |
| தொழிற்பாட்டுத் தகவல்கள் | *53* |
| * தொழிற்சாலைகள் வாரியாக இலாபம்/ (நட்டம்) பற்றிய விபரங்கள் | *54-55* |
| *மாதாந்த தேயிலை உற்பத்தி பற்றிய விபரங்கள் | *56* |
| * வருடாந்த தேயிலை உற்பத்தி பற்றிய விபரங்கள் | *57* |
| * மாதாந்த கொழுந்து வழங்கல் பற்றிய விபரங்கள் | *58* |
| * வருடாந்த கொழுந்து வழங்கல் பற்றிய விபரங்கள் | *59* |
| * ஒப்பீட்டு விபரங்கள் - உற்பத்தி | *60* |
| * ஒப்பீட்டு விபரங்கள் - விற்பனை சராசரி | *61* |
| பயிற்சி மற்றும் அபிவிருத்தி | *62 - 64* |
| * உச்சமட்ட விலைகள் | *65* |

**கூட்டாண்மைத் தகவல்**

| | |
|---|---|
| கம்பெனியின் பெயர் | : களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் |
| கம்பெனி பதிவிலக்கம் | : PB 1020 |
| மாற்றப்பட்ட அலுவலகம் | : இலக்கம் 556, நாகஹமுல்ல, பன்னிப்பிட்டிய வீதி, தலங்கம் தெற்கு, பெலவத்த,பத்தரமுல்ல. |
| சட்டமுறையான தன்மை | : மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புடைய பொதுக்கம்பெனி<br>1992 செத்தெம்பர் 30 ஆந் திகதி இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டது |
| தொலைபேசிஇலக்கம் | : 011-4645279 |
| பக்ஸ் இலக்கம் | : 011-4645279 |
| மின்னஞ்சல் முகவரி | : 'ktfl@sltnet.lk |
| கணக்காய்வாளர்கள் | : கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்<br>இலக்கம். 306/72, பொல்தூவவீதி, பத்தரமுல்ல. |
| செயலாளர்கள் | : கோப்பரேட் சேர்விசஸ் லிமிரெட்<br>216, த சேரம் பிளேஸ், கொழும்பு 10 |
| சட்டத்தரணிகள் | : எப் ஜேஅன்ட் த சேரம்<br>சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு<br>216, த சேரம் பிளேஸ், கொழும்பு 10. |
| வங்கியாளர்கள் | : மக்கள் வங்கி |
| பணிப்பாளர் சபை | : திரு. பீ. ஏஸ். சமரக்கோன் - தலைவர்<br>திருமதி எஸ்.என.அத்தநாயக்க - பதில் முகாமைத்துவப் பணிப்பாளர்<br>திரு. ஹேமால் கஸ்தூரி ஆரச்சி, திரு. தம்மிக்க அம்பேவெல<br>திரு. ஏ.யு.சீ. அத்துகோரள, திரு. எம்.ஏ.எஸ்.என்.கே. மந்திரிநாயக்க<br>திருமதி. டப்ளிவ்.ஏ.இந்திராணிசுகத்ததாச, திரு. எம்.ஏ.எஸ்.சீ. பளிஹவடன<br>திரு. பீ. இராசையா, திரு. துசித பீ. ரத்நாயக்க<br>திரு. ஜீ.நல்லபெரும, திரு. கருணாதிலக பிராஹ்மன |
| சிரேட்ட முகாமைத்துவம் | : திரு. பீ.ஜயசேகர (முகாமையாளர் நிதி மற்றும் சந்தைப்படுத்தல்)<br>திரு. ரீ. டப்ளிவ். எம்.எஸ். பண்டார<br>(முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவம்)<br>திரு.ரீ.ஏ.டீ. திலகரத்ன<br>(முகாமையாளர் -களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை)<br>திரு. துசித சிறிவர்தன<br>(முகாமையாளர் - தேரங்கல தேயிலை தொழிற்சாலை)<br>திரு. எல்.ஏ.டீ.டீ.ஐ. நந்தசிறி<br>(உதவி முகாமையாளர் - ஹினிதும ஹில்ஸ் தேயிலை தொழிற்சாலை)<br>திரு. ஜயலால் வீரக்கோன் - முகாமையாளர் - மெணிக்திவெல தேயிலை தொழிற்சாலை) |
| தொழிற்சாலைகள் | : களுபோவிட்டியான சீரீசீ தொழிற்சாலை<br>அபேவில, களுபோவிட்டியான<br>தொலைபேசி / பக்ஸ். 0913 783020<br>மின்னஞ்சல் - ktflk@sltnet.lk<br><br>ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை,<br>ஜெஸ்மின்வெளி சந்தி, தவலம.<br>தொலைபேசி / பக்ஸ். 041 720 1222<br><br>தேரங்கல தேயிலை தொழிற்சாலை<br>கிரிவெல்கெலே, பிற்றபெத்தர<br>தொலைபேசி / பக்ஸ். 0913 783621<br>மின்னஞ்சல் - dtfl@sltnet.lk<br><br>மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை,<br>திஸ்மட வீதி, மெணிக்திவெல.<br>தொலை/பக்ஸ்.:081-2069620/21 |

# அறிமுகம்

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை 1982 இன் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட 2007 இன் 07 ஆம் இலக்க புதிய கம்பெனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட கடப்பாடுகொண்ட கம்பெனியாகும். சீரீசீ தேயிலையை உற்பத்தி செய்வதற்காகவே கம்பெனி தாபிக்கப்பட்டதோடு பங்கொன்று ரூபா 10 வீதம் மதிப்பீடு செய்யப்பட்ட ஐந்து மில்லியன் பங்குகளாக 50 மில்லியன் ரூபாவினைக்கொண்ட ஆரம்ப மூலதனத்துடன் அது 1994 ஓகத்து 01 ஆந் திகதி வணிகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தது. இந்தியக் கடனுதவித்திட்டத்தின் கீழ் ஆரம்ப மூலதனம் வழங்கப்பட்டது. அதேபோன்று இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் எமது இரண்டாவது தொழிற்சாலையான தேரங்கல தேயிலைத் தொழிற்சாலையும் தாபிக்கப்பட்டதோடு 2000 மார்ச்சு மாதத்தில் தொழிற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. முன்னர் தேயிலைச்சக்தி நிதியத்தின்கீழ் நிலவிய எமது மூன்றாவது தொழிற்சாலையான ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை இலாபத்தைப் பகிர்ந்துகொள்ளும் உடன்படிக்கையொன்றின் கீழ் களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலைக் கம்பெனிக்கு கையளிக்கப்பட்டது. சொந்த நிதியங்களைப் பயன்படுத்தி கம்பெனி இந்த தேயிலைத் தொழிற்சாலையை மீண்டும் நிறுவியதோடு ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை 2012 ஆம் ஆண்டில் இருந்து தனது தொழிற்பாடுகளை ஆரம்பித்தது.

கம்பெனியுடன் புதிதாக இணைந்த மெணிக்திவெல தொழிற்சாலை முன்னர் தேயிலைச்சக்தி மன்றத்திற்கு உரித்தானதாக இருந்ததோடு அது கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர தேர்தல் தொகுதியின் மெணிக்திவெல கிராமத்தில் அமைந்துள்ளது. இந்த தொழிற்சாலையை மீண்டும் நிறுவுவதற்காக கம்பெனி தனது சொந்த நிதியத்தைப் பாவித்தது.

தேயிலை சிறுபற்றுநிலங்கள் உரிமையாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட தெரிவுசெய்த தேயிலைக் கொழுந்தினைப் பாவித்து கம்பெனி அண்ணளவாக மிகவும் உயர்ந்த தரத்திலான 2,000,000 கிலோகிறாம் தேயிலையை வருடாந்தம் உற்பத்தி செய்கின்றது.

கம்பெனியின் தேயிலை உற்பத்தி தரகர்கள் ஊடாக கொழும்பு தேயிலை ஏலவிற்பனைக்கு அனுப்பிவைக்கப்படுவதோடு சிறிய அளவில் தலைமையகத்திலும் தொழிற்சாலைகளிலும் உள்ள விற்பனை நிலையங்களில் சந்தைப்படுத்தப்படுகின்றது.

அமைப்பக விதிகளின் பிரகாரம் கம்பெனியின் பணிப்புரை விதிகள் கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

- செய்கையாளர்களிடமிருந்து கொள்வனவுசெய்த தேயிலைக் கொழுந்தினை பரிகரித்தல், செயற்பாங்கிற்கு உட்படுத்துதல் மற்றும் உற்பத்தி செய்யும் தொழில்முயற்சியை மேற்கொள்ளல்.
- தேயிலை நடுகைசெய்தல், செய்கைபண்ணுதல் மற்றும் தேயிலைத் தோட்டங்களை முகாமைசெய்தல் மற்றும் நிர்வகித்தல்.

**வர்த்தகப் பெயரும் தேயிலை வகைகளும்**

தரம் என்பதை எடுத்துக்கொண்டால் நாட்டின் தாழ்நிலப் பிரதேசத்தில் சீரீசீ தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலைக் கம்பெனியாகும்.

- “களுபோவிட்டியான தேயிலை” விற்பனைச் சின்னத்தின்கீழ் களுபோவிட்டியான சீரீசீ தேயிலை சந்தைப்படுத்தப்படுகின்றது.
- “தேரங்கல” மற்றும் “கிரிவெல்கெலே” தேயிலை விற்பனைச் சின்னத்தின்கீழ் தேரங்கல மரபுரீதியான தேயிலை சந்தையில் சந்தைப்படுத்தப்படுகின்றது.
- “ஹினிதும ஹில்ஸ்” மற்றும் “ தவலம ஹில்ஸ்” தேயிலை விற்பனைச் சின்னத்தின்கீழ் ஹினிதும மரபுரீதியான தேயிலை சந்தையில் சந்தைப்படுத்தப்படுகின்றது.
- “மெணிக்திவெல” தேயிலை விற்பனைச் சின்னத்தின்கீழ் மெணிக்திவெல மரபுரீதியான தேயிலை சந்தையில் சந்தைப்படுத்தப்படுகின்றது.

# நோக்கு

இலங்கையின் மிகச்சிறந்த சீரீசீ மற்றும் மரபுரீதியான தேயிலையை உற்பத்திசெய்தல் மற்றும் சந்தைப்படுத்தலில் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட எடுத்துக்காட்டாக மாறுதல்.

# அரும்பணி

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக்கொண்டு உயர்தரம்கொண்ட சுவைமிக்க அத்துடன் வாடிக்கையாளர் நேயமுள்ள இலங்கைத் தேயிலையை உற்பத்தி செய்தல்

# தாபனக் கட்டமைப்பு


தலைவர்/பணிப்பாளர்
முகாமைத்துவ பணிப்பாளர்
முகாமையாளர் (மனிதவள மற்றும் நிர்வாக)
முகாமையாளர் (நிதி, சந்தைப்படுத்தல்)
தொழிற்சாலை முகாமையாளர்கள் (4)
உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் (1)
நிர்வாக உத்தியோகத்தர் (1)
உதவிமுகாமையாளர் சந்தைப்படுத்தல்
உதவிமுகாமையாளர் நிதி
உதவி தொழிற்சாலை முகாமையாளர்கள் (3)
முகாமைத்துவ உதவியாளர் (2)
சாரதி (02)
பியோன் (02)
தொழிலாளி (02)
விற்பனை உதவியாளர் (2)
கணக்கு உதவியாளர் (2)
முகாமைத்துவ உதவியாளர் (3)

## களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்
## தாபனஞ்சார் முகாமைத்துவம்

**திரு. எம். என். ஜயவர்தன**
முகாமைத்துவப் பணிப்பாளர்

---

**திரு. எம். ஏ. எஸ். பீ. பளிஹவடன**
நிறைவேற்றுப் பணிப்பாளர்

---

**திரு. பீ. ஜயசேகர**
(முகாமையாளர் - நிதி மற்றும் சந்தைப்படுத்தல்)

---

**திரு. ரீ. டப்ளிவ். எம். எஸ். பீ. பண்டார**
(முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் மனிதவளம்)

---

**திரு. ரீ. ஏ. டி. ஜே. சீ. திலகரத்ன**
(முகாமையாளர் - களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை)

---

**திரு. ரீ. சிறிவர்தன**
(முகாமையாளர் - தேரங்கல தேயிலைத் தொழிற்சாலை)

---

**திரு. எல். ஏ. டி. டி. நந்தசிறி**
(உதவி முகாமையாளர் - ஹினிதும ஹில்ஸ் தேயிலைத் தொழிற்சாலை)

---

**திரு. ஜே. வீரக்கோன்**
( முகாமையாளர் - மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலை)

---

# தலைவரின் மீளாய்வு

2017 மார்ச்சு 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வருடாந்த அறிக்கையை தங்களிடம் சமர்ப்பிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். சர்வதேச ரீதியில் போன்றே உள்நாட்டு ரீதியிலும் தோன்றிய பல்வேறு பிரதிகூலமான நிலைமைகள் காரணமாக தோற்றுவிக்கப்பட்ட பின்னடைவுகள் காரணமாக மீளாய்வுக் காலப்பகுதியானது இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலுக்கு மிகவும் சவால் நிறைந்ததாக அமைந்தது. 2015 இல் இருந்து முன்கொண்டுவரப்பட்ட உலகளாவிய பரிமாணத்தில் நிலவிய துரிதமாக மாற்றமடைகின்ற மற்றும் எதிர்வுகூற இயலாத நுண்பொருளாதார நிலைமைகள் மற்றும் நடப்பு வருடத்தின் இரண்டாவது காலாண்டில் நிலவிய பாதகமான வானிலை தேயிலைக் கைத்தொழிலின் மந்தகதியிலான வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தது. உற்பத்தியின் பின்னடைவின் பேரில் ஆண்டுக்குள் தேயிலை ஏற்றுமதியிலான ஈட்டல்களை கடந்த வருட ஏற்றுமதி வருமானத்தின் 12.7 % ஐ பிரதிநிதித்துவம்செய்த 1.340 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 12.3% ஐ பிரதிநிதித்துவம்செய்து 1.269 அமெரிக்க டொலர்களாக அமைந்தது.

**உலகளாவிய சவால்கள்**

2016 ஆம் ஆண்டுக்கான இலங்கையின் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தி 292.6 மில்லியன் கிலோ கிறாமாக அமைந்தமையால் முந்திய வருடத்தில் பெற்ற 328 மில்லியன் கிலோ கிறாமுடன் ஒப்பிடுகையில் 11% வீழ்ச்சியினை சுட்டிக்காட்டி ஏழு ஆண்டுகளில் பதிவாகிய மிகவும் குறைவான தேயிலை உற்பத்தியாகவும் அமைந்ததது. உற்பத்தியின் இந்த பின்னடைவு மற்றும் பாதகமான காலநிலைக் போக்கின் விளைவாக தேயிலை ஏற்றுமதி முந்திய வருடத்தின் 306.9 மில்லியன் கிலோ கிறாமுடன் ஒப்பிடுகையில் 288.8 மில்லியன் கிலோ கிறாம் வரை 6% ஆல் வீழ்ச்சியடைந்தது.

உலகளாவியரீதியில் எடுத்துக்கொண்டால் ரஷ்ய சந்தை மீண்டும் இயல்புநிலையை அடையும் அறிகுறிகள் வெளிப்பட்டதோடு ரஷ்யா இலங்கையின் மிகப்பெரிய தேயிலை இறக்குமதியாளராக மேலோங்கியது. அமெரிக்க டொலருடன் சார்புரீதியாக ரூபிள் பலமடைந்தமை மற்றும் 2017 ஆம் ஆண்டில் மசகெண்ணெய் விலை கணிசமான அளவில் உயர்வடைந்தமை, ரஷ்யா இலங்கையில் இருந்து தேயிலையைக் கொள்வனவு செய்வதற்காக பங்களிப்புச் செய்தது. இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகப்பெரிய கொள்வனவாளராக விளங்கியது முறையே ஈரான் மற்றும் ஈராக் ஆகும். பிராந்தியத்தில் நிலவிய அரசியல் உறுதியற்றதன்மை காரணமாக ஐக்கிய அரபு எமிர் இராச்சியம், குவைத், சிரியா மற்றும் லிபியா ஆகிய நாடுகளுக்கான தேயிலை ஏற்றுமதிக் கொள்திறன் கணிசமான அளவில் குறைவடைந்தது.

.

**கம்பெனியின் செயலாற்றுகை**

சவால்மிக்க இந்த பின்னணியின் மத்தியில் கூட புரள்வின் 20.6% மற்றும் இலாபத்தின் 201% வளர்ச்சியைப் பதிவுசெய்து எமது கம்பெனி மீளாய்வாண்டில் 935 மில்லியன் ரூபா வருமானத்தையும் 29.5 மில்லியன் ரூபா வரிவிதிப்புக்கு பிந்திய இலாபத்தையும் பதிவுசெய்தது.

**கம்பெனியின் மூலோபாயம்**

தரம்மிக்க உயர்ரக தயாரிப்புகளை உற்பத்திசெய்யும் பொருட்டு எமது அடிப்படை இலக்கு கீழே காட்டப்பட்ட சாதகமான உற்பத்தி நடைமுறைகளை உள்ளடக்கியதாகும். இந்த சூழமைவில் கம்பெனியின் இறுதி நோக்கத்தை அடைவதற்காக மூலப்பொருட்கள், செயற்பாங்கு மற்றும் சந்தைப்படுத்தலின் மீதான தரமான அளபுருக்களுக்காக முகாமைத்துவம் தலைமை வகிக்கின்றது. மூலோபாயரீதியான பார்வைக்கோணத்தில் எடுத்துக்கொண்டால், விளைச்சலை மேம்படுத்துகின்ற முயற்சியாக சாதகமான விவசாய மற்றும் உற்பத்தி நடைமுறைகள் சம்பந்தமாக தேயிலை சிறுபற்றுநில உரிமையாளர்களுக்கு விழிப்பணர்வூட்டவும் அறிவினை மேம்படுத்தவும் அதன்மூலமாக இறுதி உற்பத்திக்கு அதிக விலையைச் சேர்க்கவும் கம்பெனி கருதுகின்றது. *ரன்தளு* சங்கங்களை அறிமுகஞ் செய்வதன் ஊடாக தேயிலை சிறுபற்றுநிலங்கள் பிரிவுடன் சாதகமான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள கம்பெனி

கருதுவதோடு சுதேச வியாபாரப் பெயரை அறிமுகஞ்செய்தல் எதிர்கால சாத்தியக்கூறாகும். விழிப்புணர்வையும் புரிந்துணர்வையும் விரிவாக்கும் வழிமுறையாக அறிவுவிருத்தி மற்றும் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை விருத்திசெய்யும் பொருட்டு களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை தனது நிறைவேற்றுப் பதவியணி மற்றும் ஊழியர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்த உள்ளது. பலம்வாய்ந்த கோட்பாடுகளின் அடிப்படையில் கம்பெனி இடையறாமல் தனது தொழிற்பாடுகளை பேணிவருவதோடு ஊழியர் குழாத்தினை தனது பெறுமதிமிக்க சொத்தாகவும் கருதுகின்றது.

**வருங்கால எதிர்பார்ப்புகள்**

இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலின் புலக்காட்சி சவால்நிறைந்த ஒன்றாக காணப்படுகின்றது. பெரும்பாலான எண்ணெய் உற்பத்தி நாடுகளான எமது முதன்மை கொள்வனவாளர் சந்தையில் நிலவுகின்ற உள்ளக மற்றும் வர்த்தக நிலைமைகள் தீர்வுக்கட்டமான காரணிகளாகும். நலிவடைந்து வருகின்ற ரூபிளின் பெறுமானம் மற்றும் வீழ்ச்சியடைந்து வருகின்ற எண்ணெய் விலை தொடர்பில் தீவிர கவனத்துடன் செயலாற்ற வேண்டும். அநுகூலமான சுங்கவரி சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை உருவாகின்ற உலக வர்த்தக அமைப்பின் அங்கத்துவத்தை 2014 ஆம் ஆண்டில் ரஷ்யா உரித்தாக்கிக் கொண்டமை ஆக்கமுறையான காரணியாக அமைந்தது. பொருளாதாரத் தடையை விதிக்க முன்னர் இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய தேயிலைக் கொள்வனவாளரான ஈரான் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கிடையிலான பதற்றநிலை குறைவடைந்ததும் இலங்கைக்கு நன்மைகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் பொதுவில் மத்தியகிழக்கில் நிலவுகின்ற சமூக – பொருளாதார நெருக்கடி கவலைதரும் விடயமாக அமைகின்றது.

உள்நாட்டு ரீதியாக எடுத்துக்கொண்டால் காலநிலைத் தன்மைகள், தொழிலாளர் சம்பளம் மற்றும் உர மானியம் ஒரு சவாலாக தொடர்ச்சியாக நிலவி வருவதோடு அதற்காக மிகச்சிறந்த முகாமைத்துவம் அவசியமாகின்றது. வருடம் பூராவிலும் கவர்ச்சிகரமானதும் தொடர்ச்சியானதுமான உர மானியம் வழங்கப்பட்டபோதிலும் தேயிலை சிறுபற்றுநிலங்கள் உரிமையாளர்கள் எதிர்நோக்கிய சவாலாக அமைந்தது யாதெனில் தரம்மிக்க உரத்தைப் பெற்றுக்கொள்வதாகும்.

**நன்றி**

பணிப்பாளர் சபையின் சார்பாக எமது பணிகளின் வெற்றிக்காக எம்மீது நம்பிக்கைவைத்து செயலாற்றுகின்ற தேயிலை சிறுபற்றுநில உடைமையாளர் பிரிவைப்போன்றே எமது தொழிற்பாடுகளை இடையறாது முன்நோக்கி நெறிப்படுத்துகின்ற களுபோவிட்டியானவின் எமது பதவியணிக்கும் முகாமைத்துவத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமக்களித்த எல்லையற்ற ஒத்துழைப்புக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருக்கும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறேன். எதிர்வரும் ஆண்டு பல்வேறு துறைகளில் சவால்கள் நிறைந்ததாக அமைந்தபோதிலும் நம்பிக்கையுடன் முன்நோக்கி நகரும் திடசங்கற்பத்தை எமக்களிக்கின்ற எமது ஊழியர்களின், தரப்பினர்களின் மற்றும் அவர்களின் பலம்பொருந்திய பங்காண்மைச் சக்திமீது நான் நம்பிக்கை வைக்கிறேன்.



**பீ.எஸ்.சமரக்கோன்**
**தலைவர்**

### வருமானப் பகுப்பாய்வு

கடந்த நிதியாண்டில் ஈட்டிய 776 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கம்பெனி பதிவுசெய்த மொத்த வருமானம் 936 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு அதனை முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20.61% அதிகரிப்பாகும். விளைச்சல் தொடர்பில் பாதகமான தாக்கமேற்படுத்திய வானிலை, ரஷ்யாவின் ஒருசில கொள்வனவாளர்கள் கென்யாவில் இருந்து சீரீசீ தேயிலையைக் கொள்வனவுசெய்யத் தொடங்கியமை மற்றும் தனது தேயிலையை இயலுமானவரை தேயிலை சிறுபற்றுநிலங்கள் பிரிவிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக தேயிலைத் தொழிற்சாலைகளுக்கிடையில் நிலவிய கடுமையான போட்டிநிலை என்பவை முந்திய வருடத்தைப்போன்றே இவ்வருடத்திலும் நிலவிய சவால்களாக அமைந்தன. வருமான ஆக்கக்கூறினை எடுத்துக்கொண்டால் 48.78 மில்லியன் ரூபாவினை உள்ளடக்கிய உள்நாட்டு சந்தைப்படுத்தல் முந்திய வருடத்துடன் சார்புரீதியாக 87% சிறிய அதிகரிப்பினைக் காட்டியது. அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நலன்புரிச் சங்கங்கள் அதிகளவில் எமது தேயிலையை கொள்வனவு செய்தமை இதற்கு ஏதுவான காரணியாக அமைந்தது.

### விற்பனைக் கிரயம் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகள்

881.6 மில்லியன் ரூபாவாக அமைந்த விற்பனைக் கிரயம் முந்திய நிதியாண்டுடன் சார்புரீதியாக 14.8% அதிகரிப்பினை சுட்டிக்காட்டியது. ஒவ்வோராண்டிலும் சமமான அளவிலான தேயிலையை உற்பத்திசெய்த போதிலும் கொழுந்துக் கிரயத்துடன் தொடர்புடையதாக தமது உற்பத்திக் கிரயத்தை குறைத்துக்கொள்வதில் கம்பெனி வெற்றிபெற்றது. மிகவும் உயர்வாக செயற்பாங்கு வினைத்திறனுக்காக வெப்பநீர் கொதிகலன் பிறப்பாக்கியொன்றை களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலையில் நிறுவியமையே அதற்கான காரணமாக அமைந்தது. கம்பெனியால் மகவுயர்ந்த தரத்தையும் உற்பத்தித்திறனையும் அடைந்ததன் பெறுபேறாக மொத்த இலாப எல்லை முந்திய வருடத்தைப் பார்க்கிலும் 544% அதிகரிப்பினைக் காட்டியது.

பல்லின செலவு ஆக்கக்கூறுகள் உயர்வடைந்தமைக்கு அமைவாக நிர்வாகச் செலவுகள் 30.5 மில்லியன் ரூபாவில் இருந்து 32.4 மில்லியன் ரூபாவரை அதிகரித்தது. பதவியணி சம்பள அளவுகளின் அதிகரித்தலுக்கிணங்க ஆளணிக் கிரயம் அதிகரித்தது.

### ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள்

ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் கடந்த நிதியாண்டில் பதிவாகிய 31.4 மில்லியன் ரூபாவிலிருந்து 7.5 மில்லியன் ரூபா வரை குறைவடைந்தது. பிற வருமானமாக காட்டப்பட்ட 23.2 மில்லியன் ரூபா ஆக்கக்கூறு திறைசேரிக் கொடையினை பிரதிநிதித்துவம் செய்வதோடு அது முந்திய வருடத்தில் பதிவழிக்கப்பட்டது அதன் விளைவாக தொழிற்பாட்டு வருமானம் கடந்த ஆண்டில் பதிவாகிய 8.4 மில்லியனில் இருந்து 28.2 மில்லியன் ரூபா வரை அதிகரித்திருந்தது.

### நிதிசார் கிரயம்

வருடத்தில் கம்பெனியின் நிதிசார் செலவுகள் 9.1 மில்லியன் ரூபாவாக அமைந்தது. நடப்பு நிதியாண்டில் கம்பெனி 12.1 மில்லியன் ரூபா வட்டி வருமானத்தை ஈட்டியது. 2003 ஆம் ஆண்டில் பீசீசீ லங்கா நிறுவனத்திற்கு கம்பெனி வழங்கிய கடன்தொகை ஐந்தொகையில் தொடர்ச்சியாக நிலவி வந்ததோடு அதன் மூலமாக கம்பெனிக்கு வட்டி வருமானம் பிறப்பிக்கப்பட்டது.

கடந்த நிதியாண்டின் 3.5 மில்லியன் ரூபாவுக்கு சார்புரீதியாக கம்பெனி 9.81 மில்லியன் ரூபா நிகர நிதிசார் இலாபத்தைப் பதிவுசெய்தது. வட்டி உள்ளடக்கம் முன்பு நிலவிய 2.4 இல் இருந்து 4.4 வரை அதிகரித்தது

வரி செலுத்திய பின்னர் 2015/16 இல் முடிவடைந்த நிதியாண்டின் 9.81 மில்லியன் ரூபா நிகர இலாபத்துடன் சார்புரீதியாக இவ்வாண்டில் நிகர இலாபம் 29.5 மில்லியன் ரூபா வரை 201% அதிகரிபினை பின்னடைவினை கம்பெனி பதிவுசெய்தது.

### நிதிநிலைமையும் திரவத்தன்மையும்

**நடைமுறையல்லாச் சொத்துக்கள்**

நடைமுறையல்லாச் சொத்துக்கள் மொத்த சொத்துக்களின் அடிப்படையில் 34.5% ஐ உள்ளடக்கியதாகும். மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டில் மெணிக்திவெல தேயிலைத் தொழிற்சாலையை அபிவிருத்திசெய்யும் பொருட்டு கம்பெனி 76 மில்லியன் ரூபா முதலீட்டினைச் செய்தது. மேற்படி தொழிற்சாலை தேயிலைச்சக்தி மன்றத்திடமிருந்தே பெறப்பட்டது.

**கடன் - பீசீசீ லங்கா லிமிரெட்**

2004 ஆம் ஆண்டில் பீசீசீ லங்கா கம்பெனிக்கு வழங்கிய 10 மில்லியன் ரூபா கடன்தொகையையும் அதற்கான திரண்ட வட்டியுமான 37.73 மில்லியன் ரூபாவையும் (மொத்த தொகை 47.73 மில்லியன் ரூபா) மீள அறவிட்டுக்கொள்வதற்காக கம்பெனி பல முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அவை வெற்றியளிக்கவில்லை.

**தொழிற்பாடு மூலதனம்**

ஐந்தொகைத் தினத்தன்று கையிருப்புத் தொகைகளின் சந்தைப்பெறுமதி பொதுவாக வீழ்ச்சியடைந்தமை காரணமாக ஆண்டுக்குள் கம்பெனியின் நடைமுறைப் பொறுப்புகள் முந்திய ஆண்டில் நிலவிய 349.16 மில்லியன் மில்லியன் ரூபாவில் இருந்து 415.27 மில்லியன் ரூபா வரை கணிசமான அளவில் அதிகரித்தது. 49.9 மில்லியன் ரூபாவாக அமைந்த வர்த்தக கடன்படுனர் ஆக்கக்கூறு 62.3 மில்லியன் ரூபாவரை அதிகரித்தது. ''வர்த்தக சென்மதிகள்'' அளவு முந்திய வருடங்களில் நிலவிய 69.1 மில்லியன் ரூபாவில் இருந்து 89.2 மில்லியன் ரூபா வரை அதிகரித்தது. எனவே கம்பெனி தனது தொழிற்பாடு மூலதன வட்டத்தை திருப்திகரமான எல்லைக்குள் முகாமை செய்துள்ளது.

**மூலதனக் கட்டமைப்பு**

**சாதாரண பங்குகளின் எண்ணிக்கை**

கம்பெனி ரூ. 46,375,070.00 பெறுமதியான சாதாரண பங்குகளை விநியோகித்தது. முன்கொண்டுவந்த இலாபம், மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டுக்காக தடுத்துவைத்த ஈட்டல்கள் மற்றும் ஒதுக்கங்கள் உயர்த்தப்பட்டதோடு அதன் மூலமாக நடப்பு நிதியாண்டுக்காக நிகர சொத்துக்கள் 465 மில்லியன் ரூபாவரை 6% ஆல் உயர்த்தப்பட்டது.

**கடனெடுத்தல்கள்**

கம்பெனி 55 மில்லியன் மூபா செயற்படு மூலதனக் கடனை மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்டதோடு அதன்பொருட்டு தேயிலைச் சக்தி மன்றம் 2% வட்டி மானியத்தை வழங்கியது.

இது கம்பெனியின் வங்கி மேலதிகப்பற்று வட்டி செலுத்துதலின் அளவினை 11.15% இல் இருந் 8% வரை குறைத்துக்கொளள் காரணமாக அமைந்தது.

# பணிப்பாளர்களின் அறிக்கை

***கம்பெனியின் தொழிற்பாடுகள் பற்றிய பணிப்பாளர்சபையின் அறிக்கை***

**தொழில்முயற்சியின் தன்மை**

செய்கையாளர்களிடமிருந்து கொள்வனவுசெய்த தேயிலைக் கொழுந்தினை பரிகரித்தல், நீண்டகாலம் வைத்திருக்கத்தக்கதாக ஆக்குதல், தயாரித்தல், செயற்பாங்கிற்கு உள்ளாக்குதல் மற்றும் சந்தைப்படுத்தலில் ஈடுபடுதல், தேயிலை செய்கை பண்ணுதல், நடுகை செய்தல், தேயிலைத் தோட்டங்களை முகாமைசெய்தல் மற்றும் நிர்வகித்தல் கம்பெனியின் பிரதான தொழில்முயற்சி நடவடிக்கைகளாகும்.

**கம்பெனியின் செயலாற்றுகை**

வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியை ஆக்குகின்ற கணக்காய்வு அறிக்கையையும் உள்ளிட்ட (இத்துடன் இணைக்கப்பட்டுள்ள) நிதிப் பெறுபேறுகள் பற்றிய கருத்துரைகளைக் கொண்டதாக ஆண்டுக்குள் கம்பெனியின் நடவடிக்கைகள் மற்றும் செயலாற்றுகை பற்றிய மீளாய்வு நிதிக் கூற்றுகளில் உள்ளடங்குகின்றன.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகள் 30 தொடக்கம் 38 வரையான பக்கங்களில் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளன.

**கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்**

கம்பெனியால் முந்திய வருடத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளில் எவ்விதமான மாற்றமுமின்றி தொடர்ச்சியாக பிரதியீடு செய்யப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்கள் பங்குகளை வகித்தல் பற்றிய ஆவணம்**

பணிப்பாளர்கள் பங்குகளை வகித்தல் பற்றி மேற்கொள்ளப்பட்ட குறிப்புகள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் 47 வது பக்கங்களில் " சம்பந்தப்பட்ட தரப்பினர்களின் கொடுக்கல் வாங்கல்கள்" தலைப்பின்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**பணிப்பாளர்களின் ஊதியமும் ஏனைய நன்மைகளும்**

2017 மார்ச்சு 31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டுக்காக பணிப்பாளர்களின் ஊதியங்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் 40 வது பக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளன.

**நன்கொடைகள்**

2017 மார்ச்சு 31 ஆந் திகதியில் முடிவுற்ற நிதியாண்டுக்காக கம்பெனியின் மொத்த நன்கொடைகள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் 41 வது பக்கத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு ரூ. 676,343.05 ஆகும்.

**<u>கம்பெனியின் பணிப்பாளர்கள்</u>**

2017 மார்ச்சு 31 ஆந் திகதியில் முடிவுற்ற நிதியாண்டுக்காக பணிப்பாளர்கள் கீழே காட்டப்பட்டவாறு அமையும்.

திரு. பீ.எஸ். சமரக்கோன் - தலைவர்
திருமதி ஐ. சுகததாச
திரு. எச்.எச். கஸ்தூரி ஆரச்சி
திரு. பீ. இராசையா
திரு. ரீ.பீ. ரத்நாயக்க
திரு. எம்.ஏ.எல்.எஸ்.என்.கே. மன்த்ரீநாயக்க
திரு. எம்.ஏ.எஸ்.பீ. பளிஹவடன
திரு. ஏ.யூ.சீ. அத்துகோரள
திரு. டீ. அம்பேவெல
திரு. ஜீ. நல்லபெரும
திரு. கே. பிராஹ்மன

**<u>கணக்காய்வுக் கட்டணங்கள்</u>**
மீளாய்வு செய்யப்படுகின்ற நிதியாண்டுக்காக கணக்காய்வுக் கட்டணம் செலுத்தப்படவில்லை.

**<u>கணக்காய்வாளர்கள் என்றவகையில் அல்லாமல் கணக்காய்வாளர்களுக்கு கம்பெனியுடனான கடப்பாடுகள்</u>**

தனது சுயாதீனத்தன்மைக்கு பங்கமேற்படக்கூடிய எவ்விதமான கடப்பாடு அல்லது உறவினை கணக்காய்வாளர்கள் கம்பெனியுடன் கொண்டிருக்கவில்லை என்பதில் பணிப்பாளர்கள் திருப்தியடைகிறார்கள்.

திரு. பீ.எஸ். சமரக்கோன்
**தலைவர்**

திரு.எம்.ஏ.எல்.எஸ்.என்.கே. மன்த்ரீநாயக்க
**பணிப்பாளர்**

கோப்பரேட் சர்விஸ் ( பிரை) லிமிரெட்
**செயலாளர்கள்**

2017 செத்தெம்பர் மாதம் 6 ஆந் திகதி

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. PLA/B/KTF/01/2016/17/01 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 03 January 2018

The Chairman
Kalubovitiyana Tea Factory Limited.

**Report of the Auditor General on the Financial Statements of the Kalubovitiyana Tea Factory Limited for the year ended 31 March 2017 in terms of Article 154(6) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka.**

---

The Tamil version of above mentioned report is sent herewith for your reference please.

Please note that this report will be tabled at the parliament.

S.T.B.Rathnayake,

Assistant Auditor General,

For Auditor General.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 | +94-11-2887223 | oaggov@sltnet.lk | www.auditorgeneral.gov.lk

## வரையறுக்கப்பட்ட களுவோவிற்றியானா தேயிலை தொழிற்சாலைக் கம்பனி

வரையறுக்கப்பட்ட களுவோவிற்றியானா தேயிலை தொழிற்சாலைக் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபங்கள் அல்லது நட்டங்கள் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுக்கள் மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் மீதான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென பணிப்பாளர் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பும் உரிமைத்துவமும்

வரையறுக்கப்பட்ட களுபோபிற்றியானா தேயிலை தொழிற்சாலைக் கம்பனி 1982 இன் 17 ஆம் இலக்க முன்னைய கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்கம்பனியாக ஒருங்கிணைக்கப்பட்டதுடன் பின்னர் இது 2007 இன் 07 ஆம் இலக்க புதிய கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் மீளப்பதிவு செய்யப்பட்டது. இது முழுமையாக அரச உடமையாக்கப்பட்ட கம்பனியாக இருப்பதுடன் கம்பனியின் தனியான பங்குதாரர் திறைசேரியின் செயலாளராவர்.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட களுவோவிற்றியான தேயிலை தொழிற்சாலைக் கம்பனியின் 2017 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்

செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

ஒரு வருட முதிர்ச்சியினை மிகைக்கின்ற முதலீடுகள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 94,360,820 பெறுமதியான 02 நிலையான சொத்துக்கள் 2018 யூன் 07 இல் முதிர்ச்சியடைவதன் காரணமாக, நடைமுறைச் சொத்துக்களாக கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

வருடாந்தம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமையினால் ரூபா 222,170,063 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவை இன்னும் பயன்பாட்டிலிருக்கின்றன. அதற்கமைய, இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவினை மீளாய்விற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

(i) நியமத்தின் 57 ஆம் பந்தியின் உறுப்புரைக்கமைய, ஊழியர் நலன்கள் பொறுப்பின் அளவிடலுக்கு உத்தேச அலகு கடன் முறைமை பிரயோகிக்கப்படல் வேண்டும். ஆயினும், கம்பனி பணிக்கொடை சூத்திரத்தை பிரயோகித்து அளவீடுகளை மேற்கொண்டிருந்தனர்.

(ii) நியமத்தின் 57(ஈ) பந்தியின் உறுப்புரைகளுக்கமைய ஊழியர் நலன்கள் பொறுப்பின் மீள் அளவீட்டில் உள்ளபடியான மிகை அல்லது நட்டம் ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும், ரூபா 691,779 தொகையான உள்ளபடியான நட்டங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012/2013 ஆம் ஆண்டில் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட ஹினிதும கில்ஸ் தேயிலை தொழிற்சாலையின் கட்டிடங்களின் வர்ணம் பூசுதல் மற்றும் திருத்தங்களுக்கு ரூபா 6,194,940 மொத்த கிரயமொன்று செலவிடப்பட்டு செலவினமாக , கணக்கிடுவதற்குப் பதிலாக கட்டிடங்களின் , கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வாக இலாபத்திற்கு எதிராக ரூபா 1,238,988 தொகையொன்று பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஆ) தொன்கல தேயிலை தொழிற்சாலைக்கு சொந்தமான தேயிலை உற்பத்தியொன்று முன்னைய ஆண்டில் அகற்றப்பட்டிருந்ததுடன் கணக்குகளிலிருந்து தேயிலை உற்பத்தியின் கிரயத்தை நீக்குவதற்கு மற்றும் ஆகையினால் உருவாக்கப்பட்ட இலாபம் / நட்டத்தை கணிப்பிட்டு மற்றும் கணக்கிடுவதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டில் அதற்கு பெறப்பட்ட ரூபா 1,000,000 தொகையொன்று, ஏனைய வருமான கணக்கின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.2.3 தொங்கல் கணக்குகள்

------------------------------------

05 வருட காலப்பகுதியொன்றுக்கு மேலாக தொடர்ந்து காணப்படுகின்ற வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளின் மீதிகளில் மற்றும் தொங்கல் கணக்குகளின் மீதிகளில் ரூபா 221,750 மற்றும் ரூபா 468,287 தொகையான மீதிகள் கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினத்தின் கீழ்க் காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றை இனங்கண்டு மற்றும் தீர்ப்பனவு செய்வதற்குப் பதிலாக முன்கொண்டு செல்லப்பட்டிருந்தன.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தற்போது செயற்பாடற்ற பட்டு மற்றும் கூட்டுப் பொருட்கள் அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறவேண்டிய ரூபா 451,547 தொகையான கடன்பட்டோர் மீதியொன்று, கம்பனியின் கணக்குகளில் முன்கொண்டு செல்லப்பட்டிருந்தது.

(ஆ) களுபோபிற்றியானா தேயிலை தொழிற்சாலையின் ரூபா 4,645,499 பெறவேண்டிய மீதியில் ரூபா 1,374,152 தொகையொன்று அல்லது 30 சதவீதம் மற்றும் கம்பனிக்குச் சொந்தமான தெறன்கல தேயிலைத் தொழிற்சாலையின் ரூபா 4,861,918 பெறவேண்டிய மீதியில் ரூபா 1,712,313 தொகையொன்று அல்லது 35 சதவீதம், மீளாய்வாண்டின் இறுதிவரை 05 வருடங்களை மிகைத்திருந்தது. எவ்வாறாயினும், அவை மீளப்பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் களுபோபிற்றியானா தேயிலைத் தொழிற்சாலையின் ரூபா 40,838,277 செலுத்தவேண்டிய கடன் மீதியில் ரூபா 1,206,655 தொகையொன்றும் அத்திகதியிலுள்ளவாறான தெறன்கல தேயிலைத் தொழிற்சாலையின் ரூபா 19,106,476 செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 274,211 தொகையொன்றும், 05 வருடங்களை மிகைத்திருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 131(1) ஆம் பிரிவு | வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் 30 |

| | | |
|---|---|---|
| | | வேலைநாட்களுக்குள் நடாத்தப்பட்டு மற்றும் அவற்றின் ஆண்டறிக்கை (பொது வடிவம் 15) கம்பனிகள் பதிவாளர்க்கு சமர்ப்பிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2015/2016 ஆண்டிற்கு அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 133 ஆம் பிரிவு | வருடாந்த பொதுச் சபைக் கூட்டமானது ஐந்தொகைத் திகதியிலிருந்து 06 மாதங்களை விட காலதாமதமில்லாமலும் முன்னைய வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்று 15 மாதங்களை விட காலதாமதமில்லாமலும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2011/2012 ஆம் ஆண்டிற்கு பின்னர் இறுதி வருடாந்த பொதுச்சபைக் கூட்டமொன்று நடைபெற்றிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு வருமான அதிகாரச் சட்டம் | |
| | 200 ஆம் பிரிவு | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக முன்னைய ஆண்டின் சுய மதிப்பீட்டில் ரூபா 1,676,203 தொகையான வருமான வரி மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கம்பனியின் வருமான வரிப் பொறுப்பு கணிப்பீட்டில் மேலதிக செலுத்துகையொன்றாக கருத்திற்கொள்ளப்பட்டு கழிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 1985 இன் 01 இலக்க ஊழியர் சேமலாப நிதி (திருத்தியமைக்கப்பட்டது) அதிகாரச்சட்டம் 9(2) ஆம் பிரிவு | கம்பனியின் ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பினை கணிப்பிடுகையில், அடிப்படைச் சம்பளத்தின் வாழ்க்கைச் செலவுப் படியின் தொடர்ச்சியான சேர்க்கைகளின் பங்களிப்பு கணிப்பிடப்படல் வேண்டும். எவ்வாறாயினும் அது அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன், ஆகையினால் 2017 மார்ச். 31 வரை ரூபா 391,248 தொகையொன்று நிதியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரச பெறுகைகள் வழிகாட்டிகள் (2006) 2.7.5 ஆம் வழிகாட்டல் | பெறுகைகள் செயற்பாடுகளின் ஆரம்பிப்பதற்கு முன்னர் பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. மேலும், தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு மனுதாரர்களுடன் ஏதேனும் தொடர்புகள் மற்றும் பேச்சு வார்த்தை நடாத்தக்கூடாது. எவ்வாறாயினும், லொறிக்கு இணைக்கப்பட்ட கொள்கலன் ஒன்று தொடர்பில் அதற்கமைய கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 9,815,528 மிகையொன்றுடன் ஒப்பிடுகையில் ரூபா 29,501,008 மிகையொன்றாகக் காணப்பட்டமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 19,685,480 அல்லது 200 சதவீத முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. விற்பனைகள் கிரயம் ரூபா 114,258,649 இனால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய செயற்பாடுகளிலிருந்தான வருமானம் ரூபா 23,913,277 இனால் குறைவடைந்திருந்த போதிலும், விற்பனைகளிலிருந்தான வருமானம் ரூபா 159,861,684 இனால் அதிகரித்தமை மேற்குறித்த முன்னேற்றத்திற்கு காரணமாகக் காணப்பட்டன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில் 2012/2013 ஆம் ஆண்டில் ரூபா 21,794,010 ஆகக் காணப்பட்ட மிகைகள் 2015/2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாகக் குறைவடைந்திருந்ததுடன் 2015/2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2016/2017 ஆம் ஆண்டில் 188 சதவீதத்தினால் நிதிசார் விளைவுகள் முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஊழியர்களின் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு மற்றும் மிகைகளுக்கான அரச வரி என்பவற்றை மீள சரிப்படுத்துகையில், 2012/2013 ஆம் ஆண்டில் ரூபா 81,785,215 ஆகக் காணப்பட்ட கம்பனியின் பங்களிப்பு தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்ததுடன் 2016/2017 ஆம் ஆண்டில் ரூபா 134,903,337 ஆக மாறியது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியிலான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மொத்த இலாப விகிதம் முறையே 5.76 சதவீதம் மற்றும் 1.079 சதவீதமாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் இறுதி இருப்பு 55 சதவீதத்தினால் அதிகரித்தமை இதற்கான பிரதான காரணமாகக் காணப்பட்டது.

**3.3 கம்பனியினால் அல்லது கம்பனிக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சேவையிலிருந்து இரண்டு ஊழியர்களினை இடைநிறுத்தியமை தொடர்பில் 2007 ஆம் ஆண்டில் கம்பனிக்கு எதிராக கொற்றப்பல ஊழியர் நியாயசபையில் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நீதிமன்றத்தில் பரீட்சாத்தமாகக் காணப்பட்டது.

(ஆ) 2010/2011 ஆம் ஆண்டில் கம்பனியின் வருமான வரி செலுத்துகையின் அடிப்படை சரியாகக் காணப்பட்டது எனக்குறிப்பிட்டு வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக 2009 யூன் 16 இல் பீபி 1020 இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட களுபோவிற்றியானா தேயிலை தொழிற்சாலையின் கீழ் களுபோவிற்றியானா, தெறன்கல, ஹினிதுமா மற்றும் மெனிக்டிவெல ஆகிய தொழிற்சாலைகள் செயற்படுத்தப்படுவதுடன் அந்த தொழிற்சாலையின் செயலாற்றல் பின்வருமாறு காணப்பட்டது.

**(அ) தேசிய உற்பத்தி**

தேயிலை சபையின் நிபந்தனையின் பிரகாரம், பயன்படுத்தப்பட்ட பச்சை இலையின் 100 கிலோகிராம்களில் ஆகக் குறைந்தது 21.5 கிலோகிராம்கள் தேயிலை உற்பத்தியொன்று மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், கம்பனியினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது உத்தம மட்டத்தில் அவர்களின் தேயிலை உற்பத்தியின் வெளியீட்டு சதவீதத்தினை பேணுவதற்கு 04 தொழிற்சாலைகள் தவறியிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டில் பச்சை இலை தேயிலையின் மீது ரூபா 28,818,983 ஆன

திரண்ட நட்டமொன்று ஏற்பட்டதுடன் உயர் தரத்திலான பச்சை இலையினைக் கொள்வனவு செய்ய முடியாதிருந்தமை மேற்குறித்த நட்டத்திற்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தன.

**(ஆ) உற்பத்திக் கிரயம் மற்றும் தேறிய விற்பனை சராசரி விலை**

கம்பனியினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், முன்னைய 03 ஆண்டுகளின் போது கம்பனியின் 04 தொழிற்சாலைகளில், ஹினிதும மற்றும் மெனிக்டிவெல ஆகிய 02 தொழிற்சாலைகளின் தேறிய விற்பனை சராசரி விலையினை மிகைத்து ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திக் கிரயம் அதிகரித்திருந்தது. ஒரு கிலோகிராம் தேயிலையின் பங்களிப்பு பிரதிகூலமொன்றாகக் காணப்பட்டமையினால், அந்த தொழிற்சாலைகளினால் தொடர்ச்சியாக நட்டங்கள் தாங்கிக்கொள்ளப்பட்டது. ஒரு கிலோகிராம் தேயிலையில் உள்ளடங்கியுள்ள நிலையான கிரயத்தில் அதிகரிப்பு மற்றும் தேயிலை இலையினை எதிர்பார்க்கப்பட்ட தரத்தில் கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தமை காரணமாக காணப்படுகின்ற ஊழியர்களின் உற்பத்தி திறன் குறைந்த மட்டமொன்றில் காணப்பட்டமை ஒரு கிலோகிராம் தேயிலையின் உற்பத்திக் கிரயத்தின் அதிகரிப்புக்கு பிரதான காரணமாகக் தாக்கமளித்திருந்தன.

**(இ) இயளளவு பயன்பாடு / இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி**

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், தொழிற்சாலை ஒவ்வொன்றிற்குமான தேயிலை உற்பத்திக்கான இலக்குகள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் கம்பனியின் பாதீட்டின் பிரகாரம், தொழிற்சாலைகளில் இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளபடியான தேயிலை உற்பத்தி மற்றும் பொறி பயன்பாடு என்பன பின்வருமாறு

| தொழிற்சாலை | பாதீட்டின் பிரகாரம் இலக்கிடப்பட்ட தேயிலை உற்பத்தி | உள்ளபடியான தேயிலை உற்பத்தி | முரண்பாட்டின் சதவீதம் சாதகங்கள் / (பாதகங்கள்) | உற்பத்தி இயளளவு | குறைப் பயன்பாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | கிலோகிராம் | கிலோகிராம் | | கிலோகிராம் | |
| களுபோபிற்றியானா | 1,100,000 | 811,708 | (26) | 1,350,000 | 39.87 |
| தெறன்ஹல | 425,055 | 429,382 | 1 | 485,000 | 11.47 |
| ஹினிதும | 325,000 | 253,157 | (22) | 485,000 | 47.80 |
| மெனிக்டிவெல | 414,209 | 209,464 | (49) | 450,000 | 53.45 |

மீளாய்வாண்டில் அனைத்து தொழிற்சாலைகளும் இயளளவின் கீழ் தொழிற்பட்டது. தெறன்ஹல தொழிற்சாலை பாதிடப்பட்ட தேயிலை உற்பத்தியொன்றை அடைந்திருந்த போதிலும், முன்னைய ஆண்டில் அந்த தொழிற்சாலையின் பாதிடப்பட்ட தேயிலை உற்பத்தி மற்றும் உள்ளபடியான தேயிலை உற்பத்தி முறையே 542,042 கிலோகிராம் மற்றும் 460,860 கிலோகிராம் ஆக குறிப்பிடப்பட்டது. ஆகையினால், அந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது பாதிடப்பட்ட தேயிலை உற்பத்தி மற்றும் உள்ளபடியான தேயிலை உற்பத்தியில் குறிப்பிடத்தக்கதொரு முரண்பாட்டினை சுட்டிக்காட்டுகின்றது.

**(ஈ) தேயிலை நாற்றுப்பண்ணையின் ஆரம்பிப்பு**

நியமத்திற்கமைய தேயிலை செடிகளை வழங்கும் நோக்குடன் மீளாய்வாண்டில் ரூபா 1,201,075 தொகையொன்றை செலவழிப்பதன் மூலம் தெறன்கல தேயிலை தொழிற்சாலைக்கு தேயிலை நாற்றுப் பண்ணையொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த வர்த்தக சிறுகிளை நாற்று மேடையின் இயளளவு 100,000 தாவரங்களாகவிருந்த போதிலும், மீளாய்வாண்டின் பண்ணையில் பயிரிடப்பட்டுள்ள தேயிலையின் மொத்த எண்ணிக்கை 51,485 ஆக குறிப்பிடப்பட்டது. ஆகையினால், பண்ணையின் மொத்த கொள்ளளவில் அது 51 சதவீதத்தினை மாத்திரம் பிரதிநித்துவப்படுத்துகின்றது.

## 4.2 பெறுகை நடைமுறை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரச பெறுகைகள் வழிகாட்டியின் 3.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ரூபா 500,000 வரை மாத்திரம் நேரடிக் கொள்வனவுக்கு அதிகாரம் வழங்க முடியும். அதற்கு முரணாக, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ரூபா 1,000,000 வரையான கொள்வனவுகளினை மேற்கொள்வதற்கு தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டல்களினை பின்பற்றாது வரையறுக்கப்பட்ட களுபோவிற்றியானா தேயிலை தொழிற்சாலைக்கு சொந்தமான தொழிற்சாலைகளினூடாக பச்சை இலை விநியோகஸ்தர்களுக்கு வழங்குவதற்கு உரங்களின் கொள்வனவுக்கு மீளாய்வாண்டில் ரூபா 38,917,405 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

4.3 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை சக்தி நிதியத்திற்கு சொந்தமான நிர்மாண வேலைகளின் கீழ் உள்ள கின்தும தேயிலை சக்தி தேயிலை தொழிற்சாலை மற்றும் எட்டிநுவர தேயிலை தொழிற்சாலைகளினை 30 வருட நீண்ட கால குத்தகையின் அடிப்படையில் கம்பனிக்குப் பெற்றுக்கொள்வதற்கு 2015 ஏப்ரல் 09 இல் குத்தகை வாடகையாக ரூபா 50,000,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 ஆகஸ்ட் 09 வரையிலும் முறையான உடன்படிக்கையொன்றில் இரண்டு தரப்பினரும் ஈடுபட்டடிருக்கவில்லை.

(ஆ) மெனிக்டிவெல தொழிற்சாலையில் உற்பத்தியாக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை முன்னேற்றுவதற்கு மற்றும் தேயிலைக்கு உயர் விலையொன்றினை பெற்றுக்கொள்வதற்கு செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் ரூபா 1,807,196 தொகையொன்றினை செலவழிப்பதன் மூலம் நிற பிரிப்பான் (Colour Separator) ஒன்று பெறப்பட்டிருந்தது. தேயிலையின் தரம் மேலும் முன்னேற்றமடைந்து இருக்க வேண்டியதுடன் அவற்றிற்கான விற்பனைகளின் விலை உயர் பெறுமதியினைப் பெற்றிருக்க வேண்டியிருந்த போதிலும், தேயிலைக்கு அவ்வாறான விலையொன்றை பெற முடியாதிருந்தது.

(இ) களுபோவிற்றியானா தேயிலை தொழிற்சாலையின் தேயிலை உலர்த்தியின் திருத்தங்களிற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 7,380,537 தொகை முற்பணங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சேவை வழங்குனரினால் மேற்கொள்ளப்பட்ட அந்த திருத்தங்களின் மீது தொழில்நுட்ப அறிக்கையொன்று பெறப்பட்டிருக்காததுடன் குறிப்பிடப்பட்ட முற்பணங்களினைக் கூட கொடுத்துத் தீர்ப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவிலலை.

4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், தலைமை அலுவலகத்திற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 26 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் உண்மையான பதவியணியினர் 28 ஆகக் காணப்பட்டது. அவற்றில், மூன்று

நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். தொழிற்சாலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 100 ஆகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 61 ஆகக் காணப்பட்டது. அவற்றில், நான்கு நபர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு முரணாக மெனிக்டிவெல தேயிலை தொழிற்சாலையின் உதவி தொழிற்சாலை உத்தியோகத்தர் மற்றும் முகாமையாளர் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் கல்விசார் அல்லது தொழில்சார் தகைமைகளின்றி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். மேலும், அவற்றிற்கு அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 தீர்த்து வைக்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2013 பெப்ரவரி 27 இல் நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் குழுவில் பின்வரும் பெறவேண்டிய மீதிகளினைக் அறவிடுவதற்கு வழிநடாத்தப்பட்டிருந்தது.

(அ) 2003 ஆம் ஆண்டில் 22 சதவீத வட்டி வீதமொன்றில் தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 10,000,000 தொகையான கடனொன்று 12 தவணைகளில் அறவிடுவதன் அடிப்படையில் அழிக்கப்பட்டிருந்த போதிலும், ஒரு தவணையேனும் அறவிடமுடியாதிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 47,438,780 ஆக அதிகரித்திருந்தது.

(ஆ) தரகர் கம்பனியொன்றிடமிருந்து 2009 ஆம் ஆண்டில் பெறவேண்டிய ரூபா 789,461 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | பெறுகைகள் கட்டுப்பாடு | அரச பெறுகைகள் வழிகாட்டல்களுடன் இணங்காமைகள். |
| (ஆ) | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் | நீண்டகாலமொன்றிற்கான மீதிகளின் அறவிடுதல் மற்றும் தீர்ப்பனவுகளில் தவறியமை |
| (இ) | நிதிசார் கட்டுப்பாடு | வங்கி மேலதிகப்பற்று மீதான பாரிய வட்டித் தொகையொன்றின் செலுத்துகை |
| (ஈ) | தொழிற்சாலை செயற்பாடுகளின் கட்டுப்பாடு | தொழிற்சாலைகளினால் தாங்கிக்கொள்ளப்பட்ட நட்டங்களினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| (உ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்படாமை மற்றும் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட ஆதனங்களுக்கான குத்தகை உடன்படிக்கைகள் காணப்படாமை. |

**களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்**
**இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானம் பற்றிய கூற்று**
**2017 மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| வருமானம் | 03 | **935,591,884.34** | 775,730,199.81 |
| விற்பனைக் கிரயம் | 04 | **(881,617,227.76)** | (767,358,578.70) |
| மொத்த இலாபம் | | **53,974,656.58** | **8,371,621.11** |
| பிற தொழிற்பாட்டு வருமானம் | 05 | 7,557,839.19 | 31,471,116.31 |
| தொழிற்பாட்டுச் செலவுகளுக்கு முன்னரான இலாபம் | | **61,532,495.77** | **39,842,737.42** |
| நிர்வாகச் செலவுகள் | 06 | **(32,446,062.42)** | (30,507,913.27) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 07 | **(816,516.79)** | (905,666.27) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து இலாபம்** | | **28,269,916.56** | **8,429,157.88** |
| நிதிசார் வருமானம் | 08.1 | **12,118,516.91** | 11,994,059.80 |
| நிதிச்சார் செலவுகள் | 08.2 | **(9,164,033.62)** | (8,428,981.00) |
| நிகர நிதிசார் வருமானம் | | **2,954,483.29** | 3,565,078.80 |
| **வரிவிதிப்புக்கு முன்னர் நிகர இலாபம்** | | **31,224,399.85** | **11,994,236.68** |
| வரிவிதிப்பு | 09 | **(1,723,391.30)** | (2,178,708.56) |
| **வரி அறவீட்டின் பின்னர் நிகர இலாபம்** | | **29,501,008.55** | **9,815,528.12** |
| **பங்கொன்றுக்கான ஈட்டல்** | 10 | **6.36** | **2.12** |

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்
2017 மார்சு 31 இல்
நிதிநிலைமை பற்றிய அறிக்கை
*( அனைத்து பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.)*

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், சாதனம், பொறித்தொகுதி | 11 | **216,541,929.33** | 232,394,679.45 |
| உயிரியல்சார் சொத்துக்கள் | 12 | **3,083,458.74** | 2,981,298.74 |
| | | **219,625,388.07** | **235,375,978.19** |
| **நடைமுறைப் சொத்துக்கள்** | | | |
| சரக்குத் தொக்குகள் | 13 | **133,380,209.23** | 92,385,495.72 |
| பீசீசீ கம்பெனியிடமிருந்து அறவிடவேண்டிய பணம் | | **47,438,779.75** | 44,702,867.29 |
| நிதிசார் சொத்துக்கள் | 14 | **165,849,052.91** | 157,886,840.52 |
| வர்த்தக மற்றும் பிற வருமதிகள் | 15 | **62,343,894.88** | 49,907,231.12 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் | 25 | **1,384,543.37** | 533,258.32 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 16 | **4,874,960.61** | 3,751,241.37 |
| **கூட்டுத்தொகை** | | **415,271,440.75** | 349,166,934.34 |
| **மொத்த சொத்துக்கள்** | | **634,896,829.09** | **584,542,912.80** |
| **சமவுரிமைப்பங்குகளும் பொறுப்பும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| வெளிப்படுத்திய மூலதனம் | 17 | **46,375,070.00** | 46,375,070.00 |
| ஒதுக்கங்கள் | 18 | **418,952,204.77** | 389,451,196.22 |
| **கூட்டுத்தொகை** | | **465,327,274.77** | **435,826,266.22** |
| **நடைமுறையல்லாச் பொறுப்பும்** | | | |
| இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள் | 19 | **12,971,187.81** | 10,897,999.45 |
| வங்கிக் கடன் - மக்கள் வங்கி | 20 | **30,937,500.07** | - |
| **கூட்டுத்தொகை** | | **43,908,687.88** | **10,897,999.45** |
| **நடைமுறை பொறுப்புகள்** | | | |
| கடன் கொடுனர்களும் அட்டுறு கட்டணங்களும் | 21 | **89,283,786.21** | 69,157,898.63 |
| வங்கி மேலதிகப்பற்று | 22 | **17,535,366.13** | 63,067,583.65 |
| வங்கிக் கடன் | 23 | **13,749,999.96** | - |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்/ (சொத்துக்கள்) | 24 | **5,091,714.15** | 5,593,164.85 |
| **கூட்டுத்தொகை** | | **125,660,866.45** | **137,818,647.13** |
| **மொத்த சமவுரிமைப் பங்குகளும் பொறுப்புகளும்** | | **634,896,829.10** | **584,542,912.80** |

2007 இன் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் அவசியப்பாடுகளுக்கமைவாகவே நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.

..................................
நிதி முகாமையாளர்

இந்த நிதிக்கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர்சபை பொறுப்பு வகித்தல் வேண்டும்.

பணிப்பாளர்சபையின் சார்பில் கையொப்பமிட்டது.

..................................
பணிப்பாளர்

..................................
பணிப்பாளர்

2017 ஒகத்து 29 ஆந் திகதி
கொழும்பில்

**களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்**
**உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று-**
**2017 மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது**
***( அனைத்துப் பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.)***

| | வெளிப்படுத்திய மூலதனம் (குறிப்பு 17) | பொது திறைசேரி | மூலதன ஒதுக்கம் | தடுத்துவைத்த இலாபம் | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|
| 2015 ஏப்பிறல் 01 இல் மீதி | **46,375,070.00** | **23,229,000.00** | **600,000.00** | **379,035,668.10** | **449,239,738.10** |
| ஆண்டுக்கான நிகர இலாபம் | - | - | - | 9,815,528.12 | 9,815,528.12 |
| சரிசெய்தல்கள் | | (23,229,000.00) | | | (23,229,000.00) |
| 2016 ஏப்பிறல் 01 இல் மீதி | **46,375,070.00** | **-** | **600,000.00** | **388,851,196.22** | **435,826,266.22** |
| ஆண்டுக்கான நிகர இலாபம் | - | - | - | 29,501,008.55 | 29,501,008.55 |
| | | | | | - |
| **2017 மார்ச்சு 31 இல் மீதி** | **46,375,070.00** | **-** | **600,000.00** | **418,352,204.77** | **465,327,274.77** |

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்
2017 மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது
காசுப் பாய்வுக் கூற்று

*( அனைத்துப் பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.)*

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்வு** | | | |
| வரி அறவிடமுன்னர் நிகர இலாபம் | | **31,224,399.85** | 11,994,236.68 |
| **சீராக்கங்கள்:** | | | |
| தேய்மானம் | | **27,076,927.96** | 25,540,763.71 |
| இளைப்பாற்று நன்மைக் கிரயத்திற்கான ஒதுக்கீடுகள் | | **3,089,158.36** | 2,091,639.45 |
| சொத்துக்களை விற்றொழித்தலிலான இலாபம் | | **-** | (1,950,000.00) |
| வட்டி வருமானம் | | **(12,118,516.91)** | (11,994,059.80) |
| பொதுதிறைசேரி கொடை சரிசெய்தல் | | | (23,229,000.00) |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/நட்டம்** | | **49,271,969.26** | **2,453,580.04** |
| பண்டங்களின் பதிவேடுகள் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | **(40,994,713.51)** | (7,472,536.47) |
| வர்த்தக மற்றும் பிற வருமதிகள் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | **(12,436,663.76)** | 19,213,377.73 |
| வர்த்தக மற்றும் பிற சென்மதிகள் (அதிகரிப்பு)/வீழ்ச்சி | | **20,125,887.58** | 15,193,466.22 |
| **தொழிற்பாடுகளிலிருந்து பெற்ற வருமானம்** | | **15,966,479.57** | 29,387,887.52 |
| செலுத்திய பணிக்கொடை | | **(1,015,970.00)** | (311,500.00) |
| செலுத்திய வரி | | **(3,076,127.05)** | (1,751,841.13) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர இலாபம்/ (பாவித்தவை)** | | **11,874,382.52** | **27,324,546.39** |
| **முதலீட்டு நடவடிக்கைளிலிருந்து காசுப்பாய்வு** | | | |
| ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி கைக்கொள்ளல் | | **(11,326,338.41)** | (89,741,662.69) |
| ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி விற்றொழித்தல் | | | 1,950,000.00 |
| கிடைத்த வட்டி | | **9,382,604.45** | 9,258,147.34 |
| வங்கிக் கடன் | | **44,687,500.03** | - |
| நிதிச் சொத்துக்களின் நிகர மாற்றங்கள் | | **(7,962,212.39)** | (20,378,270.62) |
| **முதலீட்டுத் தொழிற்பாடுகளிலிருந்து நிகர காசு** | | **34,781,553.68** | **(98,911,785.97)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசு/(பாவித்தவை)** | | | |
| | | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப் பாய்வு /(பாவித்தவை)** | | - | - |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் நிகர அதிகரிப்பு/ (வீழ்ச்சி)** | | **46,655,936.20** | (71,587,239.58) |
| ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | | **(59,316,341.72)** | 12,270,899.18 |
| **ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை** | 16 | **(12,660,405.52)** | **(59,316,341.72)** |

## 1. அறிக்கையிடும் அமைப்பாண்மை

### 1.1 கூட்டாண்மைத் தகவல்கள்

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் 1982 இன் 17 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 1992 செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட மற்றும் 2007 இன் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2009 யூன் 16 ஆந் திகதி மீள் பதிவு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்புடைய இலங்கையை வதிவிடமாகக்கொண்ட கம்பெனியாகும்.

கம்பெனியின் பதிவுசெய்த அலுவலகம் இலக்கம் 556, நாகஹமுல்ல, பெலவத்த, தலங்கம தெற்கு எனும் முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

தேயிலையை செய்கை பண்ணுதலும் உற்பத்தியும் அத்துடன் தேயிலைச் செய்கையாளர்களிடமிருந்தும் தமக்கே சொந்தமான தோட்டங்களிலிருந்தும் கொள்வனவுசெய்த தேயிலையை சந்தைப்படுத்துவதுமே கம்பெனியின் பிரதான தொழிற்பாடுகளாகும்.

### 1.3 பணிப்பாளர்கள்

2017 மார்ச்சு 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளை பணிப்பாளர்சபை இத்துடன் சமர்ப்பிக்கின்றது. நிதிக் கூற்றுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பணிப்பாளர்சபை பொறுப்புக்கூறல் வேண்டும்.
2017 மார்ச்சு 31 இல் கம்பெனியின் பணிப்பாளர்கள் கீழே காட்டப்பட்டவாறு அமைவர்.

திரு.பீ.எஸ். சமரக்கோன்
திருமதி. எஸ். என். அத்தநாயக்க
திரு. ஹேமால் கஸ்தூரி ஆரச்சி
திரு. ஏ.யூ.சீ. அத்துகோரள
திருமதி டப்ளிவ். ஏ.இந்திராணி சுகததாச
திரு. பீ. இராசையா
திரு. ஜீ. நல்லபெரும
திரு. தம்மிக அம்பேவெல
திரு. எம்.ஏ.எல்.எச்.என்.கே. மன்த்ரீநாயக்க
திரு. எம்.ஏ.எஸ்.பீ. பளிஹவடன
திரு. துசித ரத்நாயக்க
திரு. கே. பிராஹ்மன

### 1.4 கம்பெனி செயலாளர்கள்

கோப்பரேட் சேர்விசஸ் (தனியார்) கம்பெனி
**216,** த சேரம் பிளேஸ்,
கொழும்பு **05**

### 1.5 பதிவுசெய்த அலுவலகம்

இலக்கம் **556,** நாகஹமுல்ல,
பெலவத்த, தலங்கம தெற்கு.

### 1.6 கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி**,**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
இலக்கம் **306/72,** பொல்துாவ வீதி**,** பத்தரமுல்ல**.**

### 1.7 நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதி

இந்த நிதிக் கூற்றுகளை வெளியிடுவதற்காக பணிப்பாளர் சபையினால் 2017 மே மாதம் 31 ஆந் திகதி அதிகாரம் வழங்கப்பட்டது.

## 2. பொதுவான கொள்கைகள்

### 2.1 தயாரித்தலுக்கான அடிப்படை

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட் கம்பெனியின் நிதிக் கூற்றுகள் நிதி நிலைமை பற்றிய கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்வுக் கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளையும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளையும் உள்ளடக்குகின்றது. இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவே இந்த நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2 அளவீட்டுக்கான அடிப்படை

சம்பந்தப்பட்ட குறிப்புகளின் கீழ் நியாயமான பெறுமதியுடன் ஏற்புடைய பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் தவிர இந்த நிதிக்கூற்றுகள் வரலாற்றுக் கிரய மரபின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. சொத்துக்களும் பொறுப்புக்களும் அவற்றின் தன்மைக்கிணங்கவும் சார்புரீதியான திரவத்தன்மை பிரதிபலிக்கப்படுகின்ற விதத்திலும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளில் இனங்காணப்பட்டுள்ள அளவுகளின்பேரில் மிகவும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளை பிரதியீடு செய்கையில் முக்கியமான மதிப்பீட்டுத்துறைகள், நிச்சமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றிய தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.3 வரி விதிப்பு

#### (அ) நடப்பு வரி

நிதிக் கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு வருமான வரிக்கான ஏற்பாடுகள் வருமானம் மற்றும் செலவு அடிப்படை அம்சங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு 2006 இன் 10 ஆம் இலக்கமுடைய உள்நாட்டு அரசிறை சட்டத்தினதும் அதன் அடுத்தடுத்த திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிப்பிடப்பட்டுள்ளது.

#### (ஆ) பிற்போடப்பட்ட வரி

பொறுப்புகள் முறையியலை பிரயோகித்து பிற்போடப்பட்ட வரியானது நிதிசார் அறிக்கையிடல் பணிகள் மற்றும் வரிப் பணிகளுக்காக பாவிக்கப்படுகின்ற அளவுகளுக்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கிடையிலான கொண்டுசெல்லல் அளவுகளில் தற்காலிக மாற்றங்களுக்கான ஏற்பாடுகளைச் செய்தே வழங்கப்பட்டுள்ளன. பிற்போடப்பட்ட வரியானது அறிக்கையிடல் திகதியாகும் வேளையில் விதிக்கப்பட்டுள்ள சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு தற்காலிக மாற்றங்களை மாற்றியவிடத்து அவற்றுக்காக பிரதியீடுசெய்ய எதிர்பார்க்கப்படுகின்ற வரி வீதத்தின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரியானது அக்கால இடைவெளிகளுடன் சார்புரீதியாக பயன்பாட்டுக்கு எடுக்கக்கூடிய எதிர்கால வரி அறவிடக்கூடிய இலாபம் நிலவுகின்ற நிகழ்தகவு உள்ள அளவுக்கே ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஒவ்வோர் அறிக்கையிடல் திகதியிலும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படுவதோடு இணை வரி நன்மைகளை அடைவதற்கான வாய்ப்பு தொடர்ந்தும் இல்லாமல் போகின்ற அளவுக்கு குறைக்கப்படும்.

## 2.4 சொத்துக்களின் மதிப்பீடும் அவற்றை அளவிடுகின்ற அடிப்படையும்

### 2.4.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி திரண்ட தேய்மானம் மற்றும் பெறுமதியின் ஏதேனும் சேதம் இருப்பின் அதனைக் கழித்து நியாயமான பெறுமானத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பவங்கள் அல்லது நிலைமைகள் மாறுவதன் மூலமாக கொண்டுசெல்லல் பெறுமதியை மீள அறவிட இயலாதென்பதை சுட்டிக்காட்டுகின்ற சந்தர்ப்பங்களில் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கொண்டுசெல்லல் பெறுமதி சேதமடைதலுக்காக மீளாய்வு செய்யப்படும். ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் அனைத்துமே முதலில் அவற்றின் கிரயத்தின் அடிப்படையிலேயே அறிக்கையிடப்பட்டுள்ளன. ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் அடுத்தடுத்து மீள் பெறுமானம் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அத்தகைய சொத்துக்களின் ஒட்டுமொத்த தொகுதியுமே நியாயமான பெறுமதியின் அடிப்படையில் மீள்பெறுமானம் செய்யப்படும். ஏதேனும் ஆதனம் மீள்பெறுமானம் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அதன் கொண்டுசெல்லல் பெறுமதி அதிகரித்துள்ளமை இடம்பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் முந்திய வருமானக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி ஆதனம் குறைவடைந்தமையாக குறிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை தவிர்ந்த அதன் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் நேரடியாகவே வரவு வைக்கப்படுவதோடு அத்தகைய சந்தர்ப்பத்தில் அதிகரிப்பு வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும். ஒரே சொத்தின் முந்திய மிகைநிலையை எதிரீடு செய்கின்ற ஏதேனும் மீள்கணிப்பீட்டு பற்றாக்குறையானது அதன் மீள்கணிப்பீட்டு ஒதுக்கத்தில் நேரடியாகவே எதிரீடு செய்யப்படுவதோடு ஏதேனும் மிகைநிலை காணப்படின் அது செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

விற்றொழித்தலின்போது விற்பனை செய்யப்பட்ட சொத்துடன் தொடர்புடைய ஏதேனும் மீள்பெறுமான ஒதுக்கம் இருப்பின் அது தடுத்துவைத்த ஈட்டல்களுக்கு சாட்டுதல் செய்யப்படும். ஏதேனும் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினத்தை மீள்நிறுவுகையில் அல்லது விற்றொழித்தலின்போது அவற்றின் பாவனை மூலமாக எதிர்கால பொருளாதார நன்மைகள் எதிர்பார்க்கப்படுவதில்லையாயின் அவை அகற்றப்பட்டதாக கருதப்படும். அவ்விதமாக சொத்துக்கள் அகற்றப்படுதல் காரணமாக தோன்றுகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் அவ்விதமாக அகற்றப்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படும்.

### (அ) தேய்மானம்

கிரயத்தின் அடிப்படையில் எளிய நேர்கோட்டு வழிமுறையைப் பயன்படுத்துதல் மூலமாக அல்லது இறையிலிக் காணிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளை மதிப்பீடுசெய்தல் மூலமாக மேற்படி சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் மேற்படி அளவுகளை பதிவேடுகளிலிருந்து நீக்கும் பொருட்டு தேய்மானத்திற்கான ஏற்பாடுகள் கணிப்பீடு செய்யப்படும். சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் பின்வருமாறு அமையும்.

| சொத்துக்களின் தொகுதி | வருடங்கள் |
|---|---|
| கட்டடங்கள் | 20 |
| வர்ணம் பூசுதல் | 5 |
| நீர் மற்றும் மின்சாரம் | 20 |
| மோட்டார் வாகனங்கள் | 4 |
| சாதனமும் பொறித்தொகுதிகளும் | 8 |
| உபகரணங்கள் | 8 |
| தளபாடம் மற்றும் பொருத்திகள் | 8 |
| கணினி மென்பொருள் | 8 |
| வீதிகள் | 10 |
| பிற | 8 |

இறையிலிக் காணிகளுக்கு எல்லையற்ற ஆயுட்காலம் உள்ளதெனக் கருதுவதால் அவற்றுக்கு தேய்மானம் செய்யப்படுவதில்லை.

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் உசிதமானதெனில் சொத்தின் எஞ்சிய பெறுமதி பயனுள்ள ஆயுட்காலமும் தேய்மானம் கழிக்கும் முறையியலும் மீளாய்வுசெய்யப்பட்டு இணக்கஞ்செய்யப்படும்.

**(ஆ) மறுசீரமைப்பு நிதியம்**

ஆரம்பத்திலேயே மதிப்பீடு செய்யப்பட்ட செயலாற்றுகை தரத்திலிருந்து எதிர்பார்த்த எதிர்கால பொருளாதார நன்மைகளை இயல்புநிலைக்கு கொண்டுவருதல் அல்லது பேணிவரும்பொருட்டு ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி திருத்தவேலைகள் அல்லது பராமரிப்புக்காக உறப்பட்ட செலவினம் அவ்விதமாக உறப்பட்டவிடத்து செலவினமாக ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.4.2 உயிரியல்சார்ந்த சொத்துக்கள்

இறந்தகால சம்பவங்களின் பெறுபேறாக கம்பெனி சொத்தினை கட்டுப்படுத்துகின்ற வேளையில் சொத்துக்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தற்கு பாய்ந்துவரக்கூடிய இயலுமை உள்ளவிடத்தும் சொத்தின் நியாயமான பெறுமதி அல்லது கிரயம் நம்பிக்கைமிக்கவகையில் அளவிடக்கூடியதாக அமையுமிடத்தும் மாத்திரமே கம்பெனியானது உயிரியல்சார்ந்த சொத்துக்களை ஏற்பிசைவு செய்கின்றது.

### 2.4.3 நிதிசார் சொத்துக்கள் (பெறுதியற்ற)

கம்பெனி முதலில் கடனும் வருமதிகளும் மற்றும் வைப்புகளை அவற்றைப் பிறப்பித்த தினத்திற்கு ஏற்பிசைவு செய்கின்றது. ஏனைய அனைத்துவிதமான நிதிசார் சொத்துக்களும் ( இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிர்ணயிக்கப்பட்ட சொத்துக்களை உள்ளிட்டதாக) சாதனத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு கம்பெனி தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கு முதலில் ஏற்பிசைவு செய்யப்படும்.

காசுப்பாய்வு மீது சொத்தின் உடன்படிக்கை உரித்துவம் முடிவுறுகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்து அபாயநேர்வுகளும் பணிக்கொடைகளும் கணிசமானவகையில் சாட்டுதல் செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கலொன்றில் நிதிசார் சொத்தொன்றின் பேரில் உடன்படிக்கை காசுப்பாய்வுகள் கிடைப்பதற்கான உரிமைகள் அதனை சாட்டுதல் செய்கையில் கம்பெனி நிதிசார் சொத்தொன்றின் ஏற்பிசைவு செய்தலை நீக்கும். கம்பெனியால் நிர்மாணிக்கப்படுகின்ற அல்லது தேக்கிவைக்கப்படுகின்ற சாட்டுதல் செய்யப்பட்ட நிதிசார் சொத்துக்களின் ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்பிசைவு செய்யப்படும்.

கம்பெனிக்கு பெறுமதிகளை எதிரீடுசெய்ய சட்டமுறையான உரித்துவம் உள்ளவிடத்து அல்லது சொத்து நிகர அடிப்படையில் தீர்க்கப்பட்டோ அல்லது பொறுப்புகள் எதிரீடு செய்யப்படுவதோடு சொத்தின் நிகர பெறுமதி நிதிக் கூற்றில் சமர்ப்பிக்கப்படும்.

கம்பெனிவசம் கீழே காட்டப்பட்ட நிதிச் சொத்துக்கள் உள்ளன. (பெறுதியற்ற)

- கடனும் வருமதிகளும்
- காசும் காசுக்கு சமமானவையும்

**(ஆ) கடனும் வருமதிகளும்**

கடனும் வருமதிகளும் என்பது முனைப்பான சந்தையில் விலைகளை சமர்ப்பித்திராத நிலையான மற்றும் நிச்சயிக்கக்கூடிய செலுத்துதல்களைக்கொண்ட நிதிசார் சொத்துக்களாகும். அத்தகைய சொத்துக்கள் முதலில் நியாயமான பெறுமதி மற்றும் நேரடியாக உடைமையாக்கிக் கொள்ளக்கூடிய ஏதேனும் கொடுக்கல் வாங்கல் கிரயத்திற்கு ஏற்பிசைவு செய்யப்படும். ஏதேனும் சேதஇழப்பீட்டு நட்டம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி முறையியலைப் பாவித்து மதிப்பிறக்கம்செய்த கிரயத்திலேயே ஆரம்ப ஏற்பிசைவுக்கு அடுத்தடுத்ததாக கடனும் வருமதிகளும் கணிப்பிடப்படும்.

**(இ) காசும் காசுக்கு சமமானவையும்**

காசுப் பாய்வு சம்பந்தமான ஒருங்கிணைந்த கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் காசு மீதிகளும் மூன்று மாதங்கள் அல்லது அதற்கு குறைவான ஆரம்ப காலமுதிர்வினைக்கொண்ட கேள்வி வைப்புகளை உள்ளடக்கியதாகும். கேள்வியின் பேரில் மீளச்செலுத்தக்கூடிய மற்றும் கம்பெனியின் நிதி முகாமைத்துவத்தின் உள்ளடங்கிய பகுதியாக அமைகின்ற வங்கி மேலதிகப்பற்று காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் ஆக்கக்கூறாக காசுப் பாய்வுகளின் பணிக்காக உள்ளடக்கப்பட்டுள்ளன. காசு மற்றும் காசுக்கு சமமானவை கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள வைப்புகளை உள்ளடக்கியதாகும். நேரில் முறையியலை பாவித்து தயாரிக்கப்பட்டுள்ள காசுப் பாய்வுகளின் பணிக்காக காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் ஆக்கக்கூறாக வங்கி மேலதிகப்பற்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 2.4.4 சேதங்கள்

இலாபம் அல்லது நட்டத்தின் மூலமாக நியாயமான பெறுமதியை வகிக்காத நிதிச் சொத்துக்கள் அது சேதமடைந்தமைக்கான புலன்களால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவா என்பதை நிர்ணயிப்பதற்காக ஒவ்வோர் அறிக்கையிடல் திகதிக்கும் மதிப்பீடு செய்யப்படும்.

சொத்தின் ஆரம்ப ஏற்பிசைவுக்குப் பின்னர் நட்ட சம்பவமொன்று நேர்ந்துள்ளமைக்கான புலன்களால் உணரக்கூடிய சான்றுகள் இருப்பின் மற்றும் நம்பிக்கையான வகையில் அளவிடக்கூடிய மேற்படி சொத்தின் மதிப்பீடுசெய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்வுகளுக்கு எதிர்மறையான தாக்கத்தை மேற்படி நட்டச் சம்பவம் ஏற்படுத்தி இருப்பின் நிதிச்சொத்தொன்று சேதமடைந்துள்ளது.

கிடைக்கக்கூடியவற்றுக்கான சேதங்கள் பற்றிய சான்றுகளை கம்பெனி கூட்டு மட்டத்தில் கருத்திற்கொள்ளும். இணையான அபாயநேர்வுப் பண்புகளைக்கொண்ட கிடைக்கத்தக்க அனைத்தும் ஒன்றாக தொகுதியாக்கப்படுவதோடு நேர்ந்துள்ள எனினும் இற்றைவரை இனங்காணப்பட்டிராத ஏதேனும் சேதத்திற்காக கூட்டாக மதிப்பீடு செய்யப்படும்.

மதிப்பிறக்கம்செய்த கிரயத்தில் அளக்கப்படுகின்ற நிதிச் சொத்துடன் தொடர்புடைய சேத இழப்பீடு அதன் கொண்டுசெல்லல் பெறுமதி மற்றும் சொத்தின் நிதிப் பயனுறுதிமிக்க வட்டி வீதத்திற்கு கழிவு செய்யப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப் பாய்வுகளின் நடப்பு பெறுமதிக்குமிடையிலான வித்தியாசமாக கணிப்பீடு செய்யப்படும். நட்டமடைதல் இலாபம் அல்லது நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு கிடைப்பவுகளுடன் சார்புரீதியாக கொடுப்பனவு கணக்கில் காட்டப்படும். சேதமடைந்த சொத்தொன்றின் பேரில் வட்டி, கழிவு எதிர்காலத்திற்கு சீராக்கல்கள் ஊடாக தொடர்ச்சியாக ஏற்பிசைவு செய்யப்படும். பின்னர் தோன்றுகின்ற சம்பவமொன்று சேத நட்டப் பெறுமதியை குறைக்க காரணமாக அமையின் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சேத நட்டத்தின் குறைத்தல் மீள்கணிப்பீடு செய்யப்படும்.

### 2.4.5 சரக்குத்தொக்குப் பண்டங்கள்

சரக்குத்தொகுப் பண்டங்கள் செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய, செயற்பாங்கிற்கு உள்ளாக்கப்படாத மற்றும் பகுதியளவில் செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய விவசாய உற்பத்திகள் மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களை உள்ளடக்கியதாகும். செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய, செயற்பாங்கிற்கு உள்ளாக்கப்படாத மற்றும் பகுதியளவில் செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய விவசாய உற்பத்திகள் நிதிக் காலப்பகுதியின் இறுதியில் முழுமையாக செயற்பாங்கிற்கு உள்ளாக்கிய உற்பத்திகளாக கருதப்படுவதோடு நிகர தேறக்கூடிய பெறுமானத்திற்கு மதிப்பீடு செய்யப்படும்.

ஏனைய நுகர்வுப் பொருட்கள் மிகவும் குறைந்த கிரயத்திற்கும் நிகர தேறிய பெறுமானத்திற்குமே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. சரக்குத் தொக்குப் பண்டங்களை விற்பனை செய்கையில் மேற்படி சரக்குத்தொக்குப் பண்டங்களின் கொண்டுசெல்லல் பணத்தொகை சம்பந்தப்பட்ட வருமானம் ஏற்பிசைவு செய்யப்பட்ட காலப்பகுதியில் செலவினமாக கம்பெனியால் ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.5 பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

இறந்தகால சம்பவமொன்றிலிருந்து தோன்றுகின்ற நடப்புக் கடப்பாட்டினை தீர்க்கையில் பொருளாதார நன்மைகளை மேலோங்கச் செய்வித்து வளங்களின் பாய்ச்சல் அதன் பெறுபேறாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் நிதிநிலைமை பற்றிய கூற்றில் பொறுப்புக்கள் ஏற்பிசைவு செய்யப்படும். கடன்படுனர் கோருகின்றவிடத்து அல்லது அறிக்கையிடல் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டிய கடப்பாடுகள் நிதிநிலைமை பற்றிய கூற்றில் நடைமுறை பொறுப்பாக கருதப்படும். நிதிநிலைமை திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்தவேண்டிய பொறுப்புகள் நிதிநிலைமை பற்றிய கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக கருதப்படும்.

கடந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சட்டமுறையான அல்லது உடன்பாடுசார்ந்த கடப்பாட்டினை கம்பெனி கொண்டுள்ளவிடத்தும் மேற்படி கடப்பாடுகளை தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் பாய்ந்து வருவதிலான இயலுமைகளைக்கொண்ட மற்றும் அதற்கான நம்பிக்கை வைக்கக்கூடிய மதிப்பீடொன்றை ஆக்க இயலுகின்றமை அவசியப்படுத்தப்படுகின்றவிடத்து நிதி நிலைமை பற்றிய கூற்றின் ஏற்பாடு ஏற்பிசைவு செய்யப்படும்.

### 2.5.1 இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள்

#### (அ) குறித்துரைத்த நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை

இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள சூத்திரத்தின் பிரகாரம் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இற்கு அமைவாக முதலாவது சேவை வருடம் ஆரம்பித்து நிறைவு செய்துள்ள சேவை புரிகின்ற ஒவ்வொரு வருடத்திற்காகவும் அனைத்து ஊழியர்களுக்கும் நிதியாண்டின் இறுதி மாதத்தின் அரைமாதச் சம்பளத்தை அடிப்படையாகக்கொண்டு ஐந்தொகையில் ஒதுக்கீடொன்று முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. பணிக்கொடை பொறுப்பானது வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுகின்ற அல்லது ஆயுட்கணிப்பீட்டு பெறுமதி கணிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் ஆயுட்கணிப்புரீதியாக மதிப்பீடு செய்யப்படுகின்ற ஒன்றோ அல்ல.

#### ஆ) குறித்துரைத்த பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

ஏற்புடைய பட்டயங்கள் மற்றும் பணிப்புரைகளின் பிரகாரம் ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புக்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புக்கும் தகைமை பெறுகின்றனர்.

**2.6 விரிவான வருமானக் கூற்று**

**2.6.1 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்**

பொருளாதார நன்மைகள் கம்பெனியை நோக்கி பாய்ந்நுவர வாய்ப்புள்ள மற்றும் உறப்பட்ட அல்லது உறப்படவுள்ள வருமானம் மற்றும் சார்ந்த கிரயங்கள் நம்பிக்கையான வகையில் அளவிடக்கூடிய அளவுக்கு வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும். கிடைத்த கைம்மாறு அல்லது விற்பனைக் கழிவு அல்லது விற்பனை வரியின்றி கிடைக்கவேண்டியவற்றின் நியாயமான பெறுமதிக்கு வருமானம் கணிப்பீடு செய்யப்படும்.

**(அ) பண்ட விற்பனை**

உரித்துவம் மற்றும் பொதுவாக இணைந்த அளவுக்கு தொடர்ச்சியான முகாமைத்துவ இடையீடு அல்லது விற்பனை செய்த பண்டங்கள் பற்றிய பயனுறுதிமிக்க கட்டுப்பாட்டினை கம்பெனி தக்கவைத்துக் கொள்ளாதவிடத்தும் பண்டங்களின் உரித்துவத்தின் கணிசமான அபாயநேர்வு மற்றும் வெகுமதிகள் கொள்வனவாளருக்கு கையளிக்கப்பட்டுள்ளவிடத்து பண்ட விற்பனையிலிருந்து கிடைக்கின்ற வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும்.

**(ஆ) இலாபம் மற்றும் நட்டம்**

ஆதனம், சாதனம், பொறித்தொகுதிகள் மற்றும் முதலீடுகள் உள்ளிட்ட ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்களை விற்றொழிக்கையில் தோன்றக்கூடிய வருமான இயல்பின் நிகர இலாப நட்டங்கள் அதற்கான விற்றொழித்தலின் பேரில் கிடைக்கின்ற பணத்திலிருந்து அத்தகைய சொத்தின் கொண்டுசெல்லல் பணத்தொகையிலிருந்து அத்தகைய சொத்தின் கொண்டுசெல்லல் பணத்தொகை மற்றும் சார்ந்த விற்பனைச் செலவுகளிலிருந்து கழித்த பின்னர் வருமானக் கூற்றில் கணக்குகள் காட்டப்பட்டுள்ளன. பிரதான வருமானப் பிறப்பாக்க செயற்பாடுகளுக்கு இடைநேர்விளைவிலான செயற்பாடுகளுக்கு தோன்றுகின்ற மற்றும் பொருண்மையற்ற இணையான கொடுக்கல் வாங்கல் தொகுதியிலிருந்து தோன்றுகின்ற இலாபம் மற்றும் நட்டத்தை நிகர அடிப்படையில் சேர்த்து அறிக்கையிட்டு சமர்ப்பிக்கப்படுகின்றது.

அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாடகைப் பணத்திலிருந்து தோன்றுகின்ற ஏதேனும் நட்டம் மேற்படி நட்டம் நேர்ந்த வருடத்திலேயே கணக்குகளில் காட்டப்படும். மிகச்சிறந்த மதிப்பீடு நட்டத்தைச் சுட்டிக்காட்டுவதாயின் ஏற்பாடொன்று ஏற்பிசைவு செய்யப்படும்.

**(இ) வட்டி வருமானம்**

பயனுறுதிமிக்க வட்டி முறையியல் பாவிக்கப்பட்டு அட்டுறு அடிப்படையில் வட்டி வருமானம் ஏற்பிசைவு செய்யப்படும்.

**(ஈ) ஏனைய வருமானம்**

ஏனைய வருமானங்கள் அட்டுறு அடிப்படையல் ஏற்பிசைவு செய்யப்படும்.

**2.6.2 செலவுகளை ஏற்பிசைவுசெய்தல்**

உறப்பட்ட கிரயம் மற்றும் குறித்துரைத்த வருமான வகையினங்களின் ஈட்டல்களுக்கிடையிலான நேரடியான தொடர்பினை அடிப்படையாகக்கொண்டே வருமானக் கூற்றில் செலவுகள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன. பயனுறுதிமிக்க வகையில் தொழில்முயற்சியை பேணிவரவும் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதியைப் பராமரிக்க உறப்பட்ட அனைத்துச் செலவினங்களும் விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன. விரிவான வருமானக் கூற்றினை சமர்ப்பிக்கும் பணிக்காக கம்பெனியின் செயலாற்றுகையின் அடிப்படை அம்சங்கள் நியாயமாக சமர்ப்பிக்கப்படுகின்றது எனும் அடிப்படையில் "செலவின் செயலாற்றுகை" முறையியல் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

## 2.7 பங்கொன்றுக்கான அடிப்படை ஈட்டல்/ (நட்டம்)

தமது சாதாரண பங்குகளுக்காக கம்பெனி பங்கொன்றுக்கான அடிப்படை ஈட்டல்/ (நட்டம்) தரவுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. கம்பெனியின் சாதாரண பங்குரிமையாளர்களுக்கு உடைமையாக்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் தீர்க்கப்படாத சாதாரண பங்குகளின் எண்ணிக்கையின் சராசரியால் வகுப்பதன் மூலமாகவே பங்கொன்றுக்கான தரவு கணிக்கப்படுகின்றது.

## 2.8 ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

நடப்புக் காலஎல்லையில் நிதிக் கூற்றுகள் பற்றிய புரிந்துணர்வினை மேம்படுத்துதல் மற்றும் இடைக்கால எல்லைகளின் ஒப்பீட்டுரீதியான தன்மையை விருத்திசெய்யும் பொருட்டு நிதிக்கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பெறுமதிகளுக்காகவும் முந்திய காலஎல்லையுடன் தொடர்புடைய அளவுசார்ரீதியான, உரைநடைசார்ந்த மற்றும் விபரமான தகவல்களை உள்ளிட்டதாக ஒப்பீட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்படும். நிதிக்கூற்றுகளில் வகையினத்தை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தியமைக்கப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பித்தலை வழங்கும்பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகுவதற்காக ஒப்பீட்டுரீதியான பெறுமதிகளும் மீண்டும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.9 அறிக்கையிடல் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிநிலைமை பற்றிய அனைத்துவிதமான பொருண்மையான ஐந்தொகைக்கு பிந்திய நிகழ்வுகளை கருத்திற்கொண்டு பொருத்தமான சந்தர்ப்பங்களில் வெளிக்கொணர்ந்து நிதிக் கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில் சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## அறிக்கையிடல் திகதியளவில் வெளியிடப்பட்டிருந்தபோதிலும் அமுலாக்கப்பட்டிராத புதிய கணக்கீட்டு நியமங்கள்

வெளியிடப்பட்டிருப்பினும் கம்பெனியின் நிதிக்கூற்றுகள் வெளியிடப்பட்ட திகதிவரை அமுலாக்கப்பட்டிராத நியமங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. இந்த நியமங்களை பட்டியலிடல் மற்றும் வெளியிடப்பட்ட பொருள்கோடல்கள் வருங்காலத் தினமொன்றில் பிரதியீடு செய்யப்பட்டவிடத்து வெளிப்படுத்துதல், நிதிநிலைமை அல்லது செயலாற்றுகையின் மீது தாக்கமேற்படுத்துமென கம்பெனி நியாயமானவகையில் எதிர்பார்ப்பவை ஆகும். அவை வலுவுக்கு வந்தவிடத்து பிரயோகிக்க கம்பெனி எதிர்பார்த்துள்ளது.

### இநிஅறி 9 – நிதிச் சாதனங்கள்

நிதிசார் சொத்துக்களை ஏற்பிசைவு செய்தல், அளவிடுதலும் வகைப்படுத்தலும் மற்றும் நிதிசார் பொறுப்புக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீடு செய்வதற்கான அவசியப்பாடுகள், நிதிச் சொத்துக்களையும் நிதிப் பொறுப்புகளையும் ஏற்பிசைவு செய்தலில் இருந்து நீக்குதல் மற்றும் நியாயமான பெறுமதிக்கு எவ்வாறு அளவீடுசெய்தல் என்பது பற்றி கணக்கீட்டு நியமம் 39 இல் ஏற்பாடுகள் மீள்நிறுவப்படுகின்ற நிதிச்சாதனங்கள் இநிஅறி 9 இல் சேர்க்கப்பட்டுள்ளன.

இநிஅறி 9 அமுலாக்கப்படுகின்ற திகதி 2018 சனவரி 01 வரை காலதாமதம் செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் கம்பெனியின் நிதிக்கூற்றுகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதில்லை.

1. இநிஅறி **14-** ஒழுங்குறுத்தல் பிற்போடல் கணக்குகள் : அமுலுக்கு வரும் திகதி 2016 சனவரி 01
2. இநிஅறி **15 –** பாவனையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானம்: அமுலுக்கு வரும் திகதி 2017 சனவரி 01
3. இநிஅறி **16** மற்றும் இநிஅறி **41** திருத்தம் - காய்க்கும் தாவரங்கள் **:** அமுலுக்கு வரும் திகதி 2016 சனவரி 01

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்
2017 மார்ச்சு 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானது
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

| *(அனைத்துப் பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.)* | குறிப்பு | **2017** | **2016** |
|---|---|---|---|
| குறிப்பு 3 - வருமானம் | | | |
| மொத்த விற்பனை | | **899,641,330.00** | 760,898,010.00 |
| கழிக்க: தரகர் கட்டணமும் விற்பனை செலவுகளும் | | **(12,830,845.40)** | (11,193,314.81) |
| | | **886,810,484.60** | 749,704,695.19 |
| கூட்டுக : உள்ளூர் விற்பனை | | **48,781,399.74** | 26,025,504.62 |
| **கூட்டுத்தொகை** | | **935,591,884.34** | **775,730,199.81** |
| **குறிப்பு 04 - விற்பனைக் கிரயம்** | | | |
| தேயிலைக் கொழுந்துக் கொள்வனவு | | **660,791,664.76** | 548,934,577.47 |
| உற்பத்திக் கிரயம் | | **181,213,223.15** | 154,405,500.09 |
| உற்பத்தி பொதுப்பணிக் கிரயம் | | **78,819,360.05** | 69,025,010.62 |
| **உற்பத்திக் கிரயம்** | | **920,824,247.96** | **772,365,088.18** |
| **முடிவுப்பொருள் அசைவு** | | | |
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | | **71,415,673.60** | 66,409,164.12 |
| ஆண்டின் இறுதியில் மீதி | | **(110,622,693.80)** | (71,415,673.60) |
| **விற்பனைக் கிரயம்** | | **881,617,227.76** | **767,358,578.70** |
| **குறிப்பு 05 - பிற வருமானம்** | | | |
| பல்லின வருமானம் | | **7,557,839.19** | 6,292,116.31 |
| சொத்துக்களை விற்றொழித்தல் மீதான இலாபம் | | - | 1,950,000.00 |
| பதிவழிக்கப்பட்டவை | | | - |
| திறைசேரி ஏற்பாடுகளை சரிசெய்தல் | | | 23,229,000.00 |
| **கூட்டுக** | | **7,557,839.19** | **31,471,116.31** |

களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை லிமிரெட்
2017 மார்ச்சு 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது
நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்
*( அனைத்துப் பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.)*

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| **குறிப்பு 06 -நிர்வாகச் செலவுகள்** | | | |
| பணிப்பாளர்களின் ஊதியம் மற்றும் பதவியணிக் கிரயம் | **6.1** | **17,437,821.66** | 14,823,259.62 |
| பிரயாணச் செலவுகள், வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் வாகனங்களை வாடகைக்கெடுத்தல் | **6.2** | **3,529,323.29** | 1,504,401.56 |
| பராமரிப்புச் செலவுகள் - வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் | **6.3** | **3,047,263.22** | 3,737,854.22 |
| தொழில்வாண்மைக் கட்டணங்கள் | **6.4** | **887,354.14** | 368,313.00 |
| காப்புறுதி மற்றும் உரிமக் கட்டணங்கள் | **6.5** | **1,240,893.45** | 894,182.29 |
| அச்சிடல் காகிதாதிகளும் தபால் கட்டணமும் | **6.6** | **749,278.73** | 607,637.41 |
| பிற நிர்வாகச் செலவினம் | **6.7** | **5,554,127.93** | 8,572,265.17 |
| **கூட்டுத்தொகை** | | **32,446,062.42** | **30,507,913.27** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு 06.1 - பணிப்பாளர்களின் ஊதியம் மற்றும் பதவியணிக்கிரயம்** | | |
| பதவியணிச் சம்பளம் | **5,713,842.23** | 4,657,581.58 |
| பணிக்கொடை | **423,791.12** | 346,168.15 |
| படிகள் | **7,039,149.07** | 6,895,111.04 |
| மேலதிகநேரப் படியும் விடுமுறைத்தினக் கொடுப்பனவுகளும் | **577,578.29** | 655,831.07 |
| ஊழியர் சேமலாப நிதிய பங்களிப்புத்தொகை | **806,348.09** | 561,764.11 |
| ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்புத் தொகை | **192,205.97** | 143,352.48 |
| மிகையூதியக் கொடுப்பனவு | **844,450.00** | 394,500.00 |
| பணிப்பாளர்சபைக் கட்டணங்கள் | **691,500.00** | 421,500.00 |
| பதவியணி நலனோம்பல் | **1,148,956.89** | 747,451.19 |
| **கூட்டுத்தொகை** | **17,437,821.66** | **14,823,259.62** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு 06.2 - பிரயாணச் செலவுகள், வாழ்க்கைச் செலவுப்படி மற்றும் வாகனங்களை வாடகைக்கெடுத்தல்** | | |
| | **1,690,413.16** | 330,367.23 |
| வாடகைக் கட்டணம் | **1,838,910.13** | 1,174,034.33 |
| **கூட்டுத்தொகை** | **3,529,323.29** | **1,504,401.56** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு 06.3 -அலுவலகக் கட்டடம், உபகரணங்கள் மற்றும் வாகனப் பராமரிப்பு** | | |
| அலுவலக கட்டடப் பராமரிப்பு | **169,403.96** | 25,500.00 |
| அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு | **248,811.33** | 171,364.72 |
| வாகனப் பராமரிப்புச் செலவுகள் | **1,090,378.59** | 1,480,298.27 |
| வாகன எரிபொருள் செலவுகள் | **1,532,269.34** | 2,060,691.23 |
| ரயர் பழுதுபார்த்தல் | **6,400.00** | - |
| **கூட்டுத்தொகை** | **3,047,263.22** | **3,737,854.22** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு 06.4 - தொழில்வாண்மைக் கட்டணங்கள்** | | |
| பிற கட்டணங்கள் | **559,209.14** | 368,313.00 |
| செயலாளர் பணிகள் கட்டணம் | **328,145.00** | - |
| வரிக் கட்டணங்கள் | **-** | - |
| **கூட்டுத்தொகை** | **887,354.14** | **368,313.00** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு 06.5 காப்புறுதி மற்றும் உரிமக் கட்டணங்கள்** | | |
| உரிமங்கள் மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் | **287,670.91** | 172,227.81 |
| பதவியணிக் காப்புறுதிக் கட்டணங்கள் | **953,222.54** | 721,954.48 |
| **கூட்டுத்தொகை** | **1,240,893.45** | **894,182.29** |

| | | |
|---|---|---|
| **குறிப்பு 06.6 -அச்சிடல், காகிதாதிகள் மற்றும் தபால் கட்டணம்** | | |
| அச்சிடல் செலவுகள் | **101,190.00** | 119,200.00 |
| முத்திரைக் கட்டணங்கள் | **79,211.00** | 19,515.00 |
| கணினி காகிதாதிகள் | **-** | - |
| ஏனைய காகிதாதிகள் | **568,877.73** | 468,922.41 |
| **கூட்டுத்தொகை** | **749,278.73** | **607,637.41** |

*(அனைத்துப் பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.)*

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| **குறிப்பு 06.7 - பிற நிர்வாகச் செலவுகள்** | | | |
| சட்டக் கட்டணங்கள் | | **240,250.00** | 130,755.00 |
| தேய்மானம் | | **1,124,828.56** | 2,567,252.41 |
| தலைமையகச் செலவுகள் | | **-** | - |
| நன்கொடைகள் | | **676,343.05** | 378,059.50 |
| தொலைபேசி | | **706,327.07** | 605,060.75 |
| செய்தித்தாள்களும் பருவச் சஞ்சிகைகளும் | | **10,800.00** | 37,900.00 |
| வாடகை செலுத்துதல்கள் | | **1,140,000.00** | 1,124,989.25 |
| மின்சாரக் கட்டணச் சிட்டைகள் | | **681,135.63** | 608,570.34 |
| புதிய கருத்திட்டச் செலவுகள் | | **-** | 2,353,740.60 |
| பிற பயன்பாடுகளும் செலவுகளும் | | **693,276.75** | 673,254.69 |
| வழங்கல் மற்றும் பண்டக் கோரிக்கைகள் - பிற | | **54,656.47** | 50,882.63 |
| பதவியணிப் பயிற்சி | | **223,077.40** | 41,800.00 |
| பண்டிகை முற்பணம் பதிவழித்தல் | | **3,433.00** | - |
| பெயரிடாப்புக் கட்டணம் பதிவழித்தல் | | **-** | - |
| மிகைவிதிப்பு | | **-** | - |
| **கூட்டுத்தொகை** | | **5,554,127.93** | **8,572,265.17** |

| | | | |
|---|---|---|---|
| **குறிப்பு 07- விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்** | | | |
| வர்த்தகக் கூடங்களும் கண்காட்சிகளும் | | **-** | 58,750.00 |
| உபசரிப்புச் செலவுகள் | | **169,968.00** | 283,325.29 |
| பதிவுசெய்தல் கட்டணம் | | **40,953.74** | 135,636.03 |
| பிரச்சாரக் கட்டணங்கள் | | **605,595.05** | 427,954.95 |
| **கூட்டுத்தொகை** | | **816,516.79** | **905,666.27** |

| | | | |
|---|---|---|---|
| **குறிப்பு 08- நிகர நிதிசார் வருமானம்** | | | |
| **08.1 நிதிசார் வருமானம்** | | | |
| நிலையான வைப்புகள் மீதான வட்டி | | **8,883,693.64** | 8,594,159.83 |
| திறைசேரி உண்டியல் மீதான வட்டி | | **25,358.22** | 289,090.86 |
| ஊழியர் கடன் மீதான வட்டி | | **395,780.84** | 318,971.69 |
| சேமிப்புக் கணக்கு வட்டி | | **77,771.75** | 55,924.96 |
| பீசீசீ லங்கா கடன் வட்டி | | **2,735,912.46** | 2,735,912.46 |
| **கூட்டுத்தொகை** | | **12,118,516.91** | **11,994,059.80** |
| | | | |
| **08.2 நிதிசார் செலவினம்** | | | |
| வங்கிக் கட்டணம் | | **564,410.80** | 83,804.17 |
| மேலதிகப் பற்று வட்டி | | **5,802,131.65** | 8,256,771.50 |
| குறுங்காலக் கடன் வட்டி | | **2,797,491.17** | 88,405.33 |
| **கூட்டுத்தொகை** | | **9,164,033.62** | **8,428,981.00** |
| **நிகர** | | **2,954,483.29** | **3,565,078.80** |

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|

**குறிப்பு 09 - வரிவிதிப்பு**

2011 இன் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 2006 இன் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை சட்டத்தின் 48(அ) பிரிவின் பிரகாரம் 16 வது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் விவசாயத் தொழில்முயற்சியாளர்கள் பெற்ற இலாபம் மற்றும் நட்டம் முதலாவது அட்டவணைக்கிணங்க 10% ஆன விகிதாசாரத்திற்கிணங்க வருமான வரிக்கு உள்ளாக்கப்படல் வேண்டும். ஏனைய இலாபம் சராசரி விகிதாசாரத்திற்கிணங்க வரிக்கு கட்டுப்பட்டதாகும்.

**9.1 நடப்பு வரிச் செலவுகள்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| நடப்பு வருடம் | **2,224,842.00** | 2,178,708.00 |
| முந்திய ஆண்டின் வருமான வரி குறை/(மிகை) ஏற்பாடுகள் | - | - |
| | **2,224,842.00** | **2,178,708.00** |

**9.2 கணக்கீட்டு இலாபத்திற்கும் வருமான வரிக்கும் இடையிலான ஒப்பீடு**

| | 2017 | 2016 |
|---|---|---|
| வரிவிதிப்புக்கு முந்திய கணக்கீட்டு இலாபம்/(நட்டம்) | **31,224,399.85** | (11,239,588.85) |
| ஏனைய மூலங்களிலிருந்து இலாபமும் வருமானமும் | **(55,124,734.00)** | (55,547,104.00) |
| இடமளியாத வகையின சமமபகுதி | **31,257,543.00** | 27,368,536.00 |
| தொழில் முயற்சியிலிருந்து சீராக்கிய இலாபம்/(நட்டம்) | **7,357,208.85** | (39,418,156.85) |
| | | |
| ஏனைய மூலங்களிலிருந்து வருமானம் | **12,143,561.00** | 11,970,926.00 |
| மொத்த நியதிச்சட்டமுறையான வருமானம் | | |
| 32 வது பிரிவின்படியான கழித்தல்கள் | **(6,824,032.00)** | (4,189,824.00) |
| தகைமைச் செலுத்துதல்கள் | | - |
| வரி அறவிடத்தக்க வருமானம் | **12,676,737.85** | 7,781,102.00 |
| | | |
| விவசாய நடவடிக்கைகள் மீதான வரி 10% | **735,721.00** | - |
| பிற வருமானங்கள் மீதான வரி 28% | **1,489,121.00** | 2,178,708.56 |
| **பிற்போடப்பட்ட வரிச் செலவுகள்** | | |
| அறவிட்ட/ (மீள்கணிப்படு செய்யப்பட்ட) பிற்போடப்பட்ட வரி | **(501,450.70)** | - |
| **மொத்த வரிச் செலவுகள்** | **1,723,391.30** | **2,178,708.56** |

**குறிப்பு 10 - பங்கொன்றுக்கான ஈட்டல் / பங்கொன்றுக்கான பங்கிலாபம்**

**10.1 பங்கொன்றுக்கான ஈட்டல்**

பங்கொன்றுக்கான அடிப்படை ஈட்டல் கீழே குறிப்பிட்டவாறு கணிப்பிடப்பட்டுள்ள ஆண்டுக்குள் விநியோகிக்கப்படுகின்ற சராசரிப் பங்குகளின் நிறையேற்றப்பட்ட சராசரி எண்ணிக்கையால் வகுக்கப்படுகின்ற சராசரி பங்குதாரர்களுக்கு உடைமையாக்கப்பட்ட இலாபத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஆண்டுக்கான நிகர இலாபம் | **29,501,008.55** | 9,815,528.12 |
| நிறையேற்றப்பட்ட பங்குகளின் சராசரி எண்ணிக்கை | **4,637,507.00** | 4,637,507.00 |
| பங்கொன்றுக்கான அடிப்படை ஈட்டல் | **6.36** | **2.12** |

**10.2 பங்கொன்றுக்கான பங்கிலாபம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஆண்டுக்கான பங்கிலாபம் | | - |
| பங்குகளின் எண்ணிக்கை | **4,637,507.00** | 4,637,507.00 |
| பங்கொன்றுக்கான பங்கிலாபம் | **-** | **-** |

குறிப்பு 11 - ஆதனம்,சாதனம்மற்றும் பொறித்தொகுதி

| கிரயம் | .இறையிலிக் காணி | கட்டடங்கள் | சாதனமும் பொறித்தொகுதியும் | தொழிற்சாலை உபகரணங்கள் | கணினி உபகரணங்கள் | அலுவலக உபகரணங்கள் | தளபாடங்களும் பொருத்திகளும் | சாதனங்கள் | மோட்டார் வாகனங்கள் | பிற | முடிவுறாத வேலைகள் | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2016 .04.01 இல் கிரயம்** | 4,605,690.64 | 259,368,108.36 | 237,726,839.72 | 9,441,371.74 | 6,850,950.57 | 2,542,961.03 | 6,968,891.40 | 838,851.80 | 25,325,165.02 | 2,724,264.01 | 669,117.43 | 557,062,211.72 |
| சேர்த்தவை | - | 210,117.50 | 6,024,947.40 | 764,192.70 | 497,364.20 | 477,250.00 | 881,643.00 | | - | 1,578,278.00 | 791,344.68 | 11,225,137.48 |
| விற்றொழித்தல் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| சாட்டுதல்கள் | - | - | | - | - | - | - | - | - | - | | - |
| **2017.03.31 இல் கிரயம்** | **4,605,690.64** | **259,578,225.86** | **243,751,787.12** | **10,205,564.44** | **7,348,314.77** | **3,020,211.03** | **7,850,534.40** | **838,851.80** | **25,325,165.02** | **4,302,542.01** | **1,460,462.11** | **568,287,349.20** |

| திரண்ட தேய்மானம் | இறையிலிக் காணி | கட்டடங்கள் | சாதனமும் பொறித்தொகுதியும் | தொழிற்சாலை உபகரணங்கள் | கணினி உபகரணங்கள் | அலுவலக உபகரணங்கள் | தளபாடங்களும் பொருத்திகளும் | சாதனங்கள் | மோட்டார் வாகனங்கள் | பிற | முடிவுறாத வேலைகள் | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2016 .04.01 இல் திரண்ட தேய்மானம்** | - | 116,989,875.79 | 166,146,103.83 | 4,322,079.64 | 4,444,628.30 | 1,862,599.40 | 3,998,625.02 | 519,457.51 | 25,281,173.76 | 1,103,948.67 | - | 324,668,491.91 |
| நடப்பு வருடத்தின் தேய்மானம் | - | 12,402,191.07 | 11,705,968.49 | 1,054,705.93 | 519,997.85 | 202,133.06 | 711,284.32 | 62,009.55 | 43,991.26 | 374,646.43 | - | 27,076,927.96 |
| விற்றொழித்தல்கள் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| **2017 .03.31 இல் திரண்ட தேய்மானம்** | **-** | **129,392,066.86** | **177,852,072.32** | **5,376,785.57** | **4,964,626.15** | **2,064,732.46** | **4,709,909.34** | **581,467.06** | **25,325,165.02** | **1,478,595.10** | **-** | **351,745,419.87** |
| **2017.03.31 இல் நிகர புத்தகப் பெறுமதி** | **4,605,690.64** | **130,186,159.00** | **65,899,714.80** | **4,828,778.87** | **2,383,688.62** | **955,478.58** | **3,140,625.06** | **257,384.75** | **-** | **2,823,946.91** | **1,460,462.11** | **216,541,929.33** |

*( தொடர்ச்சி ...)*

| | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|
| **குறிப்பு 12 - உயிரியல் சொத்துக்கள்** | | | |
| ஆண்டின் தொடக்கத்தில் | | **2,981,298.74** | 2,937,798.74 |
| சேர்த்தவை | | **102,160.00** | 43,500.00 |
| ஆண்டின் இறுதியில் | | **3,083,458.74** | **2,981,298.74** |
| **குறிப்பு 13 - கையிருப்பு** | | | |
| உணவு பானங்கள் | | **19,815,416.36** | 18,368,990.06 |
| முடிவுப் பொருட்கள் | | **110,622,693.80** | 71,415,673.60 |
| நுகர்வுக் கையிருப்புகள் | | **700,943.48** | 489,515.05 |
| பொதுவானவையும் பிறவும் | | **2,241,155.59** | 2,111,317.01 |
| **கூட்டுத்தொகை** | | **133,380,209.23** | **92,385,495.72** |
| **குறிப்பு 14 - நிதிசார் சொத்துக்கள்** | | | |
| திறைசேரி உண்டியல்கள் | | **261,401.64** | 261,401.64 |
| நிலையான வைப்புகள் | | **107,684,232.45** | 100,338,242.56 |
| நிலையான வைப்புகள் - மக்கள் வங்கி | | **7,903,418.82** | 7,287,196.32 |
| தேயிலைச் சக்தி நிதியம்: தயவுசெய்து அடிக்குறிப்பினை பார்க்கவும் | | **50,000,000.00** | 50,000,000.00 |
| **கூட்டுத்தொகை** | | **165,849,052.91** | **157,886,840.52** |
| **குறிப்பு 15 - வர்த்தக மற்றும் பிற வருமதியான காசு** | | | |
| வர்த்தக கடன்படுனர் | | **27,952,469.25** | 16,826,239.19 |
| பதவியணி கடன்படுனர் | | **12,479,569.25** | 11,191,987.95 |
| வைப்புகள் | | **3,948,474.34** | 3,522,474.34 |
| முற்பணமும் செலுத்துதல்களும் | | **18,958,838.47** | 19,424,908.88 |
| அசையாத மீதிகள் | | **1,782,133.15** | 1,719,210.34 |
| ஏனைய பற்று மீதிகள் | | **56,662.98** | 56,662.98 |
| | | **65,178,147.44** | 52,741,483.68 |
| கழிக்க: அறவிடமுடியாக்கடன் ஏற்பாடுகள் | | **(2,834,252.56)** | (2,834,252.56) |
| **கூட்டுத்தொகை** | | **62,343,894.88** | **49,907,231.12** |

**குறிப்பு 16 - காசு மற்றும் காசுக்கு சமமானவை**

| | | 2017 | 2016 |
|---|---|---|---|
| மக்கள் வங்கி - | கணக்கிலக்கம்.204100140084885 தலைமையகம் | - | - |
| மக்கள் வங்கி- | கணக்கிலக்கம்.204100130084961 தலைமையகம் | **32,788.80** | 426,760.02 |
| மக்கள் வங்கி - | கணக்கிலக்கம் .204100140084911 தலைமையகம் | **73,048.10** | 229,518.10 |
| மக்கள் வங்கி - | கணக்கிலக்கம்.060100110000681 மொறவக்க | **1,717,634.76** | 1,275,325.30 |
| மக்கள் வங்கி - | கணக்கிலக்கம்.060100100000592 மொறவக்க | - | 1,979.14 |
| இலங்கை வங்கி | கணக்கிலக்கம் 0006065711 - நெலுவ | **1,083.00** | 1,083.00 |
| இலங்கை வங்கி | கணக்கிலக்கம் 75958665 - பெலவத்த | **227,549.60** | 25,961.76 |
| இலங்கை வங்கி | கணக்கிலக்கம் 205604 - தவலம | **15,000.00** | 6,764.60 |
| இலங்கை வங்கி - | கணக்கிலக்கம் 256100110021039 - பிலிமதலாவ | **303,403.52** | 40,441.17 |
| கையிலுள்ள காசு | | **8.75** | 199,835.84 |
| இடைப்போக்கிலுள்ள காசு | | - | 89,123.00 |
| சேமிப்புக் கணக்கு - மக்கள் வங்கி | | **2,504,444.08** | 1,454,449.44 |
| **கூட்டுத்தொகை** | | **4,874,960.61** | **3,751,241.37** |

<u>அடிக்குறிப்பு</u>

50 மில்லியன் ரூபாவாக அமைகின்ற இப்பணத்தொகை கடன்/குத்தகைப் பணமாக தேயிலைச் சக்தி நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. தேயிலைச் சக்தி நிதியத்துடன் சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் கணிகள் இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை.

*( அனைத்து பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன)*

| | 2017 | 2016 |
|---|---|---|
| **பிரதிகூலமான காசு மற்றும் காசுக்கு சமமானவை** | | |
| வங்கி மேலதிகப்பற்று | **(17,535,366.13)** | (63,067,583.65) |
| **காசப்பாய்வுக் கூற்றின் பணிக்காக மொத்த காசு மற்றும் காசுக்கு சமமானவை** | **(12,660,405.52)** | **(59,316,342.28)** |

**குறிப்பு 17 - வெளிப்படுத்திய மூலதனம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| **வெளிப்படுத்திய மற்றும் முழுமையாகவே செலுத்தப்பட்ட** | | |
| சாதாரண பங்குகள் 4,637,507 | **46,375,070.00** | 46,375,070.00 |
| **கூட்டுத்தொகை** | **46,375,070.00** | **46,375,070.00** |

**குறிப்பு 18 - ஒதுக்கங்கள்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| கொடைகள் - திறைசேரி | - | - |
| மூலதன ஒதுக்கம் | **600,000.00** | 600,000.00 |
| இலாப / நட்டக் கணக்கு | **418,352,204.8** | 388,851,196.22 |
| **கூட்டுத்தொகை** | **418,952,204.77** | **389,451,196.22** |

**குறிப்பு 19 - இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| குறித்துரைத்த இளைப்பாற்றுக் கடப்பாடுகளின் நடப்புப் பெறுமதியின் அசைவுகள் | | |
| ஆண்டின் தொடக்கத்தில் | **10,897,999.45** | 9,117,860.00 |
| நடப்புச் சேவைகள் கிரயம் | | |
| வட்டிக் கிரயம் | **1,083,065.22** | 826,761.95 |
| ஆயுட்கணிப்பு இலாபம்/நட்டம் | **691,773.52** | 122,194.08 |
| ஆண்டுக்கான ஏற்பாடுகள் | **1,314,319.62** | 1,142,683.42 |
| முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள் | - | - |
| ஆண்டில் செலுத்தியவை - காசாக | **(1,015,970.00)** | (311,500.00) |
| சென்மதிகள் | - | - |
| ஆண்டின் இறுதியில் | **12,971,187.81** | **10,897,999.45** |

**குறிப்பு 20 - வங்கிக் கடன் - மக்கள் வங்கி**

| | 2017 | 2016 |
|---|---|---|
| செயற்படு மூலதனக் கடன் - மக்கள் வங்கி | **30,937,500.07** | |

**குறிப்பு 21 - கடன்கொடுனரும் அட்டுறு கட்டணங்களும்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| தேயிலைக் கொழுந்து வழங்கலாளர்கள் | **35,670,658.92** | 18,430,891.50 |
| வர்த்தக கடன்கொடுனர் | **24,343,000.83** | 22,528,857.27 |
| சேவை ஒப்பந்தக்காரர்கள் | **2,426,681.45** | 2,065,194.73 |
| பதவியணி கடன்கொடுனர் | **3,417,131.90** | 2,083,550.91 |
| அட்டுறு செலவினம் | **22,479,256.98** | 23,139,821.42 |
| உரிமை கோராத மீதிகள் | **467,639.60** | 424,166.59 |
| ஐய மற்றும் பிற கடன் | **479,416.53** | 485,416.21 |
| **கூட்டுத்தொகை** | **89,283,786.21** | 69,157,898.63 |
| | | - |

**குறிப்பு 22 - வங்கி மேலதிகப்பற்று**

| | 2017 | 2016 |
|---|---|---|
| மக்கள் வங்கி கணக்கிலக்கம் 204100140084885 | **17,264,253.34** | 63,067,583.65 |
| மக்கள் வங்கி மொறவக்க கணக்கிலக்கம் 06010010000059 | **271,112.79** | |
| **கூட்டுத்தொகை** | **17,535,366.13** | **63,067,583.65** |
| | | - |

**குறிப்பு 23 - வங்கிக் கடன்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| **செயற்படு மூலதனக் கடன்** | **13,749,999.96** | **-** |

**குறிப்பு 24 - பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள்/(சொத்துக்கள்)**

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஆண்டின் இறுதியில் | **5,593,164.85** | 5,593,164.85 |
| வருமானக் கூற்றுக்கு/ (கூற்றிலிருந்து) சாட்டுதல் செய்யப்பட்டது. | **(501,450.70)** | |
| **ஆண்டின் இறுதியில்** | **5,091,714.15** | **5,593,164.85** |

| *(அனைத்துப் பணத்தொகைகளும் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.)* | குறிப்பு | 2017 | 2016 |
|---|---|---|---|

**குறிப்பு 25 - உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஆண்டின் தொடக்கத்தில் மீதி | **(533,258.32)** | (960,125.19) |
| ஆண்டுக்கான ஏற்பாடுகள் | **2,224,842.00** | 2,178,708.00 |
| | **1,691,583.68** | 1,218,582.81 |
| முந்திய ஆண்டுக்கான செலுத்துதல்கள் | **(874,000.00)** | |
| ஆண்டுக்கான செலுத்துதல்கள் | | (894,000.00) |
| **மொத்தம்** | | |
| | **817,583.68** | 324,582.81 |
| **<u>குத்தகைக் கடன்</u>** | | |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | **(2,149,011.56)** | |
| தடுத்துவைத்தல் வரி | **(53,115.49)** | (857,841.13) |
| **நிகர செலுத்தவேண்டிய/(மீளச் செலுத்தவேண்டிய)** | **(1,384,543.37)** | (533,258.32) |

**குறிப்பு 26 - மூலதனச் செலவுகளும் கடப்பாடுகளும்**

| | 2017 | 2016 |
|---|---|---|
| காணிகள் | **-** | - |
| கட்டடங்கள் | **210,117.50** | 59,998,455.68 |
| சாதனம் மற்றும் பொறித்தொகுதி | **6,024,947.40** | 24,732,556.64 |
| உபகரணங்கள் | **1,261,556.90** | 2,908,824.95 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | **881,643.00** | 629,784.50 |
| சாதனங்கள் | **-** | 153,088.90 |
| மோட்டார் வாகனம் | **-** | - |
| பிற | **1,578,278.00** | 606,334.59 |
| முடிவுறாத வேலைகள் | **791,344.68** | 669,117.43 |
| **கூட்டுத்தொகை** | **10,747,887.48** | 89,698,162.69 |

**குறிப்பு 27 - எதிர்பாராத சந்தர்ப்பங்கள்**

**விசாரிக்கப்பட்டு வருகின்ற வழக்குகள்**

i)தான் சேவையிலிருந்து நீக்கப்பட்டமை அநீதியாகுமென கூறி தன்னை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு வேண்டி திரு. ஜீ. ஹேமசந்திர கொட்டபொல தொழில் நியாய மன்றில் தொழில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். (வழக்கு எண் LT/KP/34/18/07)

ii) தான் சேவையிலிருந்து நீக்கப்பட்டமை அநீதியாகுமெனக் கூறி தன்னை மீண்டும் சேவையில் அமர்த்துமாறு வேண்டி திரு. எல்.எஸ். விஜயமான்ன கொட்டபொல தொழில் நியாயமன்றில் தொழில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.(வழக்கு எண் LT/KP/34/19/07)

iii) 2010/2011 ஆண்டுக்கான வருமானவரி செலுத்துதல் சம்பந்தமாக வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சாதகமான தீர்ப்புக்கு எதிராக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் மேன்முறையீட்டு நிதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார். (வரி 08/2016)

iv) 2011/12 மதிப்பீட்டு வருடத்திற்காக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட வரி மதிப்பீட்டுக்கு எதிராக கம்பெனி வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவிடம் மேன்முறையீடு செய்துள்ளது. (TAC/IT 060-2016)

**குறிப்பு 28 - அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்**

இந்த நிதிக் கூற்றுகளில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்களுக்கு அவசியமாகின்ற பொருண்மையான நிகழ்வுகள் அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் இடம்பெறவில்லை.

**குறிப்பு 29 - இணைந்த தரப்பினரின் வெளிப்படுத்துகை**

பொதுவான தொழில்முயற்சிப் பணிகளின்போது இணைக் கம்பெனிகளுடன் "கைக்கெட்டிய தூர" அடிப்படையிலேயே கொடுக்கல்வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**29.1 பிரதான முகாமைத்துவக் குழுமங்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

பிரதான முகாமைத்துவக் குழுமம் என்பது கம்பெனியின் செயற்பாடுகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ திட்டமிடுதல், வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான தத்துவங்களையும் பொறுப்பினையும் கொண்டுள்ள ஆட்களாவர்.

பிரதான முகாமைத்துவக் குழுமங்கள் அறிக்கையிடல் நிறுவனத்தின் பணிப்பாளர்சபையை உள்டக்கியதாகும்.

29.1.1. பிரதான முகாமைத்துவக் குழுமங்களின் இழப்பீடு செலுத்துதல் கணக்குக்குறிப்பு 6 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

29.1.2. ஆண்டில் பிரதான முகாமைத்துவக் குழுமங்களுக்காக கடன்கள் வழங்கப்படவில்லை.

29.1.3. நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களை உள்ளிட்ட பிரதான முகாமைத்துவக் குழுக்களின் பங்குகளை வகித்தல் - எவருமே கிடையாது.

29.1.4. ஏனைய கம்பெனிகளின் பணிப்பாளர்களான கம்பெனியின் பணிப்பாளர்களின் பெயர்கள்
பணிப்பாளர் திருமதி இந்திராணி சுகததாச இலங்கை காப்புறுதிச் சபையின் தலைவராவார்.

**29. 2. நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள்**

நெருங்கிய குடும்ப அங்கத்தவர்கள் என்பது கம்பெனியுடன் மேற்கொள்கின்ற தனது கொடுக்கல் வாங்கல்களில் தாக்கமேற்படுத்துமென எதிர்பார்க்கின்ற அல்லது தாக்கத்திற்கு இலக்காகக்கூடிய ஆட்களாவர்.

ஆண்டில் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

**29.3 நிர்வகிக்கப்படுகின்ற கம்பெனிகள், இணைக் கம்பெனிகள் மற்றும் பங்காண்மைத் தொழில்முயற்சிகளுடனான கொடுக்கல் வாங்கல்கள் : எதுவும் கிடையாது.**

குறிப்பு 30 - தொழிற்சாலைப் பண்டங்கள்

30.1 விற்பனை

| | தலைமையகம் | களுபோவிட்டியான தொழிற்சாலை | தேரங்கல தொழிற்சாலை | ஹினிதும ஹில்ஸ் தொழிற்சாலை | மெணிக்திவெல தொழிற்சாலை | கூட்டுத்தொகை |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| மொத்த விற்பனை | - | 481,417,820.00 | 211,088,740.00 | 108,224,500.00 | 98,910,270.00 | 899,641,330.00 |
